வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 10.09.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 279 | பக்கங்கள் : 16

# பயங்கரவாத தடுப்பு சட்டத்தை மீளாய்வு செய்யவேண்டும் அரசு!

## ஐ. நா. விசேட அறிக்கையாளர்கள் பரிந்துரை



கொழும்பு, செப்ரெம்பர் 10

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் தரத்துக்கு ஏற்ப கொண்டுவர மீளாய்வு செய்யவேண்டும் என ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர்கள் பரிந்துரைத்துள்ளனர். 15




## ஊரடங்கு தொடர்பில் இன்று முக்கிய முடிவு

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் இன்று தீர்மானம் எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தனிமைப்படுத்தல் ஊர 15

## தீவிரவாத சக்திகளை இல்லாதொழியுங்கள்

### ஜனாதிபதிக்கு ஞானசார தேரர் கடிதம்

கொழும்பு, செப். 10

நாட்டில் உள்ள தீவிரவாத சக்திகளை சட்டத்தின் முன் நிறுத்தி, பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்குமாறு பொதுபலசேனா அமைப்பு, ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட 15

## யாழ்ப்பாணத்தில் மேலும் 6 பேர் கொரோனா தொற்றால் மரணம்!

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்.மாவட்டத்தில் மேலும் 6 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை 15

## கொரோனா தொற்றால் மேலும் 175 பேர் மரணம்

கொழும்பு, செப். 10

நாட்டில் மேலும் 175 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணமடைந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன 15

### கைபேசி, ரீ.வி. உள்ளிட்ட 11 வகையான

## அத்தியாவசியமற்ற பொருட்கள் இறக்குமதிக்கு புதிய கட்டுப்பாடு

கொழும்பு, செப். 10

கைபேசிகள், தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் சாதனங்கள், உடைகள், வீட்டுப்பாவனைப் பொருட்கள், பழ வகைகள், ரயர் உள்ளிட்ட 11 வகையான அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்யும் போது இறக்குமதியாளர் 15

## 2,856 பேருக்கு நேற்று கொரோனா

கொழும்பு, செப். 10

நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 856 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 77 ஆயிரத்து 636 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 18 ஆயிரத்து 147 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 8 ஆயிரத்து 116 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## வடக்கில் 71 தொற்றாளர்கள்!

### போதனா மருத்துவமனை ஆய்வக முடிவு

யாழ்ப்பாணம், செப். 10

வவுனியாவில் 37 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 71 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 289 பேரின் மாதிரிகள் நேற்று பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே இந்தத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இதன்படி, வவுனியா விமானப்படை முகா 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

ஒரு சந்நியாசிகள் மடத்தில் அதன் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். ஒரு காலத்தில் அவரின் மடா லயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கிய ஆலயம். தற்போது மதிப்புக் குறைந்து பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருந்தது அவருக்குத் தெளிவாக விளங்கியது.

மடத்தின் உள்ளேயே சந்நியாசிகள் யாரும் ஒரு வரை ஒருவர் மதிக்காமல் தன்னிச்சையாகச் செயல் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொறுக்க இயலாமல் ஒருநாள் அந்த மடால யத்தின் தலைவர் தன்னைவிட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப் போனார். தன் பிரச்னையை எடுத்துச் சொன்னார்.

அந்தக் குருவும் சற்று நேரம் ஆழ்ந்து யோசித்து விட்டு பிறகு-

“உங்கள் மடத்தில் கடவுளே வந்து தங்கியிருக் கிறார். நீங்கள் எவரும் அவரைக் கண்டுகொள்ளவும் இல்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படி சிறப்பு செழிக்கும்?”, என்று கேட்டார்.

இதைக் கேட்ட மடத்தலைவர் வியப்பு மாறாமலே மடத்திற்குத் திரும்ப வந்து அங்கே இருந்த சந்நியாசிகளுக்கு விபரம் சொன்னார்.

அவர்களுக்கும் ஆச்சரியம். அந்தக் கணத்தில் இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர் கடவுளாக இருக்கக்கூடும் என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும், அன்பாகவும், மிகுந்த மரியாதையுட னும் ஒவ்வொருவரும் அணுகினார்கள்.

நாளடைவில் மடத்தின் சிறப்புப் பல மடங்கு உயர்ந்து போனது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை!

கூடிச் செயல்படும்போது கொடுத்துப் பெறுதல் அவசியமான ஒரு சூட்சுமம் ஆகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் நடக்கின்ற சங்கதிகளைப் பார்த்தால் மேலேயுள்ள மடத்தின் கதைதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

தமிழ் மக்கள் தமது அரசியல் எதிர்காலத்திற்கு நம்பிக்கொண்டிருப்பது சர்வதேசத்தை மாத்திரமே. நமது நல்ல காலம், பிரிட்டனிலும் கனடாவிலும் ஏராளமான எம்.பி.க்களை தெரிவுசெய்கின்ற - அல் லது தெரிவில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலையில் நம்மவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களின் வாக்குகளுக்காக இந்த நாடுகளின் அரசியல்வாதிகள் நமது பிரச்னையில் அக்கறை காட்டிவருகின்றனர் என்பதை மறுக்க முடியாது. ஆனால், அது நமது அடுத்த சந்ததிவரை தொடருமா என்பது தெரியவில்லை. இது தனித்து ஆய்வுக்குட் படுத்த வேண்டியது.

நாம் நம்பியிருக்கும் சர்வதேசத்தை அணுகுவதற்கு நமக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பம்தான் இந்த ஜெனிவா விவகாரம். இலங்கை அரசை வழிக்குக் கொண்டுவர இந்த ஜெனிவாவையே (ஐ.நாவையே) நம்பிக்கொண்டிருக்கின்றோம்.

ஆனால், அந்த ஜெனிவாவுக்குக்கூட தமிழ் மக்கள் எதனை சொல்ல விரும்புகிறார்கள் என்பதை ஒருமித்து ஒரே குரலில் நம்மால் சொல்ல முடியாதபோது நம்மை நினைத்து நமக்கே வெட்கம் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியவில்லை.

கட்சிகள்தான் ஒன்றாக பயணிக்க முடியவில்லை என்றால் ஒரு கட்சிக்குள்ளேயே குத்திமுறிகிறார்கள் தலைவர்கள்.

கூட்டமைப்பின் (தமிழ் அரசின்) தலைவர்கள் ஜெனிவாவிற்கு கடிதம் அனுப்பியதில் ஏற்பட்ட பிளவு, இப்போது ஒருவரையொருவர் வசைபாடுகின்ற அளவிற்கு மாறியிருக்கிறன்றது. மாகாண சபை நிர்வாகம் சீர்கெட்டதற்கு அனுபவசாலியான சீ. வீ. கே. சிவஞானமும் முக்கிய காரணம் என்று சிவஞானம் சிறிதரன் எம்.பி. கொழுத்திப்போட, “எனது வாயைக்கிளறாதீர்கள். இதுவரை நான் அடக்கி வாசித்தேன். யாருக்கும் பயப்படமாட்டேன்” என்று சீ.வீ.கேயர் சவால் விடுகின்றார்.

கூடவே, நான் தமிழ் அரசு பாரம்பரியத்தில் வந்தவன் என்று சொல்வதன் மூலம் இப்போது மிக அண்மைக்காலத்தில் தமிழ் அரசுக்காரர்களாக வந்த தலைவர்களை எச்சரிக்கிறார் போலும். தமிழ் அரசின் பாரம்பரியம் இதுதானா என்றும் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

இப்படியே நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் உங்கள் தலைகளைக் காப்பாற்றுவதற்காக சண்டையிட்டுக்கொண்டிருந்தால், அந்த மடாலயம் போல பொலிவிழந்த மடாலயமாக போய்விடுவீர்கள் என்று எச்சரிப்பதைத் தவிர வேறு எதுவும் சொல்லத் தோன்றவில்லை.

**- ஊர்க்குருவி**

# நல்லைக்குமரன் மலர் வெளியீடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 10

பொது முடக்கம் முழுமையாக நீக்கப்பட்டு, கோவிட் 19 தொற்று நிலை தணிந்து சுகாதார நடைமுறை களின்படி ஆகக் குறைந்த பங்குபற்று நர்களுடன் ஒன்றுகூடல்களை நடத் தும் நிலை ஏற்படும்போது “நல்லைக் குமரன்” மலர் வெளியீடு, யாழ் விருது வழங்கும் நிகழ்வு நடத்தப்ப டும் என்று யாழ். மாநகர ஆணையா ளரும் சைவசமய விவகார குழுத் தலைவருமான இ. த. ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டவை வருமாறு,

மேலும், நல்லைக்குமரன் மலர் வெளியீடு, யாழ். விருது வழங்கல் தொடர்பில் கடந்த 8 ஆம் திகதி சுகாதார நடைமுறைகளின் கீழ் சைவசமய விவகாரக் குழு மாநகர சபையில் கலந்துரையாடியது.

இதன்படி மலர் வெளியீட்டையும் கௌரவிப்பு நிகழ் வையும் ஒன்றாக நடத்துவது என்று முடிவு எட்டப்பட்டது. அத்து டன்,பொது முடக்கம் முழுமையாக நீக்கப்பட்டு, கோவிட் 19 தொற்று நிலை தணிந்து சுகாதார நடைமுறை களின்படி ஆகக் குறைந்த பங்குபற் றுநர்களுடன் ஒன்றுகூடல்களை நடத்தும் நிலை ஏற்படும்போது இந்த நிகழ்வை நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது.

இந்த வருட இறுதிக்குள் சுமூக நிலை ஏற்படாதவிடத்து “சூம்” செயலி, தொலைக்காட்சி நேரலை மூலம் சுகாதார நடைமுறைகளுடன் குறைந் தபட்ச பங்குபற்றுநர்களுடன் நடத்துவது எனவும் தீர்மானிக் கப்பட்டது - என்றுள்ளது. (ஐ)

# கிளிநொச்சியில் கொரோனாவுக்கு ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 10

கிளிநொச்சியில் உயிரிழந்த முதி யவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் உயிரிழந்த 81 வயது முதி யவரின் மாதிரிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக் கப்பட்டன. அந்த மாதிரிகள் நேற்று பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டபோதே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

# ஆசிரியர் கலாசாலை மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், செப். 10

ஆசிரியர் கலாசாலைகளில் 2019/ 2020 கல்வியாண்டுக்குரிய கற்கை நெறியை கடந்த புதன்கிழமை (08.09.2021) நிறைவு செய்தவர்களை 09.09.2021 தொடக்கம் பாடசாலை களுக்கு அனுப்புமாறு இசுருபாய கல்வி அமைச்சின் செயலாளர் ஆசிரியர் கலாசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஆசிரிய மாணவர்களுக்கென பரீட்சைத் திணைக்களத்தால் நடத் தப்படவிருந்த இறுதிப்பரீட்சைகள் கோவிட் 19 தொற்று நிலைமையால் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாலேயே கல்வி அமைச்சு இந்த முடிவை எடுத்திருப்பதாக அறியவருகின்றது.

இதன்படி, கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து 376 ஆசிரிய மாணவர்கள் கற்கை நெறியை நிறைவு செய்திருக்கின்றனர் எனவும் இவர்களுக்குரிய கற்கை நெறி பெரும் பாலும் இணையவழியில் கல்வி அமைச்சின் எல்.எம்.எஸ். (e -thaksalawa - LMS) தளத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டதாகவும் கலா சாலை அதிபர் வீ. கருணலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ)

## கல்வி TV CHANNEL-1

**10.09.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி TV CHANNEL - 2

**10.09.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
10.09.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதன் பங்கிற்கு பிறிதொரு கடிதத்தை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு அனுப்பி வைத்திருக்கின்றது. ஏற்கனவே, மூன்று கடிதங்கள் அனுப்பப் பட்டிருக்கின்ற நிலையில் முன்னணியும் அதன் பங்கிற்கு பிறிதொரு கடிதத்தை அனுப்பி வைத்திருக்கின்றது. வழமைபோல், இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டுமென்று குறித்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

மற்றவர்களை விடவும் தாங்களே கொள்கையில் உறுதியானவர்கள் என்பதை வலியுறுத்துவதில் எப்போதுமே நாட்டம் கொண்டிருக்கும் முன்னணியினர், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஒரு மந்திரம் போல் உச்சரித்து வருகின்றனர். ஒரு நாட்டின் விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதென்பது சாதாரணமான ஒரு விடயமல்ல. ஒரு நாடு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக் கொண்டிருக்குமானால், அந்த நாட்டின் விவகாரத்தை குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வது இலகுவான ஒரு காரியமாக அமையும். ஆனால், குறித்த ஒரு நாடு குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக் கொள்ளாது விட்டால், அந்த நாட்டின் விவகாரத்தை குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வது என்பது மிகவும் கடினமான விடயம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அது ஒரு சாத்தியமற்ற விடயம். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் குற்றவியல் நீதிமன்றத்தை பரிந்துரைக்கலாம். அது அவரின் நிலைப்பாடு. ஆனால், அவர் கூறிவிட்டார் என்பதற்காக அவ்வாறு நடந்துவிடப் போவதில்லை.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக் கொள்ளும் சர்வதேச உடன்பாடான ரோம் சட்டத்தில் (Rome Statute) இலங்கை கையெழுத்திடவில்லை. இந்த நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை விடயத்தை நேரடியாகக் கையாள முடியாது. இது இலங்கைக்கு மிகவும் சாதகமான அம்சம். இந்த நிலையில்தான் தமிழ்த் தேசிய பரப்பில், ஒரு குறிப்பிட்ட தரப்பினர் தொடர்ந்தும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை வலியுறுத்தி வருகின்றனர்.


ஆனால், இலங்கை தமிழர் விடயத்தில், மனித உரிமைகள் சார்ந்து தலையீடு செய்யும் நாடுகளோ, இந்த விடயத்தில் கரிசனை கொள்ளவில்லை. குறிப்பாக, இலங்கைமீதான மனித உரிமைகள் சார்ந்த அழுத்தங்களுக்கு பிள்ளையார் சுழியிட்ட, அமெரிக்கா, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அங்கீகரிக்கவில்லை. தமிழரின் அரசியல் விடயத்தில் கரிசனை கொண்டிருக்கும், பிராந்திய சக்தியான இந்தியா அங்கீகரிக்கவில்லை. ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகள் போர் குற்றங்களில் ஈடுபட்டன எனக் கூறி, அமெரிக்காவின்மீதும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றது. ஆனால், அதனை ஒரு விடயமாகவே அமெரிக்கா கருத்தில் கொண்டதில்லை.

இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் அமெரிக்காவிற்கு சென்றபோது, அவர் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு, இராஜாங்கத் திணைக்களம் தடைவிதித்தது. அப்போது அமெரிக்க இராஜாங்கச் செயலாளராக இருந்த மைக் பொம்பியோ, குற்றவியல் நீதிமன்றத்தை ஒரு சட்டவிரோத நீதிமன்றம் என்று வர்ணித்திருந்தார். ஆனால், 2002இல். ஐ.நா உடன்பாட்டிற்கு அமைவாக உருவாக்கப்பட்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை 123 நாடுகள் அங்கீகரித்திருக்கின்றன. ஆனால், இதனை அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் அங்கீகரிக்கவில்லை.

இலங்கையின் உள்விவகாரத்தில் தீர்மானகரமான தலையீடுகளை செய்யும் நாடுகளாக, மேற்குறிப்பிட்ட நாடுகளே இருக்கின்றன. இந்த நிலையில் தமிழர் விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும் விவகாரத்தில் இந்த நாடுகள் ஒருபோதுமே கரிசனை காண்பிக்காது. ஏனெனில், இந்த நாடுகள் எவையும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறனதொரு பின்புலத்தில்தான் முன்னணியும் ஒரு சில தமிழ் புலம்பெயர் அமைப்புக்களும் இதனை வலியுறுத்திவருகின்றன. கூட்டமைப்பு இதனை எதிர்க்கவில்லை. ஆனால், இதிலுள்ள சிக்கலான நிலைமையை விளங்கிக்கொண்டு அமைதியாக இருக்கின்றது. அதேபோன்று, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை தமிழ்த் தேசியர்கள் எதிர்க்கவில்லை. ஆனால், இதிலுள்ள நடைமுறை சிக்கல்கள், விளங்கிக்கொள்ளப்பட வேண்டும் என்பதே அவர்களின் வாதமாக இருக்கின்றது. தர்க்க ரீதியில் அது சரியானது.

# ஜெனிவாமீது திரும்பும் கர்தினால் ரஞ்சித்தின் கவனம்

- அலசுவது இராஜதந்திரி -



*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்ட விசாரணைகள் மற்றும் அவை குறித்த தற்போதைய நிலவரம் பற்றி வத்திக்கானில் பாப்பரசருக்கு விளக்குவதற்காக பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் சகிதம் வத்திக்கான் பயணமாகின்றார் என்ற செய்தியை பிரதம மந்திரியின் அலுவலகம் மறுத்துள்ளது.*

*இருந்தபோதிலும் இத்தாலியின் பொலோக்னா நகரில் இடம்பெறும் சர்வதேச மகாநாடொன்றிலேயே பிரதம மந்திரியும், வெளியுறவு அமைச்சரும் கலந்து கொள்கின்றனர் என்ற தகவல் பின்னர் வெளியாகியிருந்தது.*

*பொலோக்னா நகர சர்வதேச மகாநாட்டில் பங்குபற்றும் பிரதமரும், வெளியுறவு அமைச்சரும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து அம்மகாநாட்டில் பங்குபற்றுவோரிடம் விளக்கமளிக்கலாம் என்ற ஊகத்தில் அதிவண. கர்தினால் மல்கம் ரஞ்சித் தமது நிலைப்பாட்டை ஓர் எச்சரிக்கையாகவும் வெளியிட்டுள்ளார்.*

*கர்தினால் மல்கம் ரஞ்சித் தமது எச்சரிக்கையில், இத்தாலியின் பொலோக்னா மகாநாட்டிலோ அல்லது வத்திக்கானில் பரிசுத்த பாப்பரசரிடமோ உயிர்த்த ஞாயிறு பற்றி தவறான விடயங்களை பிரதமரும் வெளியுறவு அமைச்சரும் வெளியிட்டால், ஜெனிவா மனித உரிமைகள் பேரவையை நாடுவோம் என்று தெரிவித்துள்ளார்.*

*இரு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகள் சம்பந்தமான தமது அதிருப்தியை பரிசுத்த பாப்பரசர் அடிக்கடி வெளியிட்டு வருகின்றமையை அவதானிக்க முடியும்.*

*இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவராகவும் பரிசுத்த பாப்பரசருக்கு அடுத்த நிலையிலுள்ள கர்தினால் என்ற தரத்திலிருக்கும் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உலக கத்தோலிக்க சமூகத்தினால் மிகவும் மதிக்கப்படுபவராகவே காணப்படுகின்றார்.*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற கொழும்பு புனித அந்தோனியார் தேவாலயம் வத்திக்கானினால் நன்கறியப்பட்ட ஒரு கத்தோலிக்க திருத்தலமாகவே இருக்கின்றது. ஏனெனில் இலங்கைக்கு 1995ஆம் ஆண்டு ஜனவரியில் பரிசுத்த பாப்பரசர் ஜோன்போல் வருகை தந்திருந்தபோது கொழும்பு கொச்சிக்கடையிலுள்ள புனித அந்தோனியார் தேவாலயத்துக்குள்ளேயே அவர் முதல் தடவையாக சென்று ஆராதனை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*அத்துடன், கத்தோலிக்க மதத்தவரிடையே மட்டுமல்ல. இந்துக்கள், பௌத்தர்களிடையே கூட ஒரு பிரசித்தி பெற்ற வணக்க ஸ்தலமாகவே கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் விளங்குகின்றது.*

*கொழும்பில் மாத்திரமல்ல. நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன.*

*கர்தினால் மல்கம் ரஞ்சித் மேலும் கருத்து வெளியிடுகையில், 14 நாடுகளைச் சேர்ந்த 47 வெளிநாட்டுப் பிஜைகளும் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளின்போது கொல்லப்பட்டனரெனவும் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பிரஜைகள் உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களான ஷங்கிரில்லா, கொன்டினன்டல் என்பவற்றில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.*

*கர்தினால் மல்கம் ரஞ்சித் வெளிநாட்டுப் பிரஜைகள் பற்றி குறிப்பிட்டிருப்பதன் மூலம் சர்வதேச சமூகத்தை தம்மால் இலகுவாக அணுகமுடியும் என்பதையும் தெரிவித்துள்ளார். எதிர்வரும் திங்கட்கிழமை ஜெனிவாவில் 48ஆவது மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் எச்சரிக்கை காலமறிந்ததாகவே இருக்கின்றது. இருந்தபோதிலும் எச்சரிப்பதைவிட ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் முறையிடுவதன் மூலம் உண்மையான தகவல்களை மேலும் சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தமுடியும். ஏனெனில், பரிசுத்த பாப்பரசரின் வாழ்விடமான வத்திக்கான் ஒரு தேசமாக இருக்கின்றது. அதன்தலைவராக இராஜதந்திர அந்தஸ்துடன் பாப்பரசர் விளங்குகின்றார். அத்துடன் வத்திக்கானுக்கு இலங்கை உட்பட உலகளாவிய ரீதியில் தூதரகங்களும் இருக்கின்றன.*

*இந்நிலையில், கர்தினால் மல்கம் ரஞ்சித் வத்திக்கானுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஏற்கனவே 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு பற்றி தெளிவுபடுத்தியுள்ள நிலையில் வத்திக்கானுக்கு மட்டுமல்ல. சர்வதேச சமூகத்துக்குக்கூட தமது தரப்பு விளக்கத்தை வழங்க முயலும் இலங்கை அரச தரப்பினரின் முயற்சி உண்மைகளை புறந்தள்ளும் ஒரு வீண் முயற்சியாகும் என்றே கருதலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**செப்ரெம்பர் - 10 வெள்ளிக்கிழமை**
**பிலவ வருடம் - ஆவணி 25**
**நல்ல நேரம் : 9.00 - 10.30**
**ராகு காலம் : 10.30 - 12.00**
**திதி : சதுர்த்தி**




**10.09.2021**

**மேடம்**
தியானம், யோகா மூலம் அமைதி காண்பீர்கள். மனத்துணிவு கூடும். முதலீடுகள் அதிக இலாபம் தரும். அன்பளிப்புகள் கிடைக்கும். குடும்பத்தினருடன் விட்டுக் கொடுத்து போவது நல்லது.

**இடபம்**
நீண்டகாலம் நிலவிய கடன் தொகை குறைந்து நிம்மதி பெறுவீர்கள். சகோதர வகையில் இருந்து வந்த மனஸ்தாபங்கள் நீங்கும். தியானம் மூலம் அமைதி காண்பீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**மிதுனம்**
நண்பர்களிடமிருந்து மகிழ்ச்சியளிக்கும் செய்தி வந்து சேரும். சகிப்புத் தன்மையுடன் செயல்பட்டால் பிரச்னை இருக்காது. பணியில் நுட்பமாகச் செயல்படுவதால் பாராட்டப்படுவீர்கள்.

**கடகம்**
நெருங்கியவர்கள் மூலம் உதவி உண்டு. உங்களின் மதிப்பு கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். பரபரப்பான நாள். உறவினர்கள் மதிக்கும்படியான செயல் ஒன்றைச் செய்வீர்கள்.

**சிம்மம்**
மற்றவர்களுக்கு ஏற்பட்ட சிரமத்தை நீக்கி வாழ்த்துப் பெறுவீர்கள். பெற்றோர் நலத்தின் மீது நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் மூலம் இலாபம் வரும்.

**கன்னி**
நீங்கள் மதிப்பவர்களின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும். நாளின் பிற்பகுதியில் எதிர்பாராத நன்மைகள் உண்டாகும். குடும்பத்தினரைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப மாறுவீர்கள்.

**துலாம்**
மனநிறைவான நாள். சாதகமான செய்தி ஒன்று வரும்.குழந்தைகளின் வளர்ச்சியும், சாதனையும் பெருமிதம் தரும்.உயரதிகாரிகளிடம் மரியாதை கூடும். நிம்மதி அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
இளைஞர்களின் பொறுமையான செயல் நன்மையை தரும்.குடும்பத்தினரின் வசதியை மேம்படுத்துவீர்கள். நட்பு வட்டம் விரியும். வேற்று மொழிக்காரர்களின் உதவி கிடைக்கும். விருப்பம் நிறைவேறும்.

**தனுசு**
அக்கம்பக்கத்து வீட்டாரின் அன்பு கூடுதலாகும். மனநிறைவான நாள். புதிய விஷயம் ஒன்றை கற்பீர்கள். இளைஞர்களுக்கு நன்மை உண்டு. நண்பர்கள், உறவினர்களால் ஏற்பட்ட வருத்தங்கள் நீங்கும்.

**மகரம்**
புதிய வாகனம் தேர்ந்தெடுக்கையில் கவனம் தேவை. வெறுத்துப் பிரிந்தவர்கள் உதவி கேட்டு வருவார்கள். சோர்வு நீங்கும். புதிய முயற்சிகளைக் கைவிடாதீர்கள்.

**கும்பம்**
சிறு வெற்றி உண்டு. பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். தாயால் நன்மை வரும். தம்பதிகளிடையே புரிதல் அதிகரிக்கும். குடும்ப நலம் சிறக்கும். முயற்சியால் பண வரவு உண்டு.

**மீனம்**
கடன் விவகாரங்களில் மற்றவர்களுக்கு பிணை நிற்க வேண்டாம். புதிய ரிஸ்க் எதையும் எடுக்காமல் செயல்படுவது நல்லது. செய்யும் செயல்களை ஈடுபாட்டுடன் செய்து பலன் அடைவீர்கள்.

# தமிழரின் அடையாளங்களை தேடி உலகெல்லாம் பயணம் செய்வோம்

## சட்டசபையில் முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு

*சென்னை, செப். 10*

தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி, இனி உலகெங்கும் பயணம் செய்வோம் என, தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:

“தி.மு.க. எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதோ, அப்போதெல்லாம் அது தமிழின் ஆட்சியாக, தமிழினத்தின் ஆட்சியாகத்தான் இருந்துள்ளது. தமிழ் மாநிலத்துக்குத் “தமிழ் நாடு” என்று பெயர் சூட்டியது நூற்றாண்டுக் கனவான செம்மொழித் தகுதியைத் தமிழுக்குப் பெற்றுத் தந்தது “மெட்ராஸ்” என்ற பெயரைச் “சென்னை“ என மாற்றியது, தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை



நிறைவேற்றியது போன்ற பலவற்றை சொல்லலாம்.

முதல்வராக இருந்த தலைவர் கருணாநிதி, தனது ஆட்சிக் காலத்தில் தொல்லியல் - ஆழ்கடல் கள ஆய்வை விரிவாக மேற்கொள்ளப் பெருமுயற்சி எடுத்தார். கடந்த 1990ஆம் ஆண்டு கடல்சார் ஆய்வுக்குப் பெருந்திட்டம் தீட்டியதும், பின்னர் கடலில் மூழ்கிய பூம்புகார் நகரத்தை கண்டறிய மேற்கொள்ளப்பட்ட ஆழ்கடல் அகழாய்வில் சில கட்டுமானப் பகுதிகள் கண்டறியப்பட்டதும், கருணாநிதியின் பெருமுயற்சியால்தான் என்பதை அனைவரும் நன்றாக அறிவோம்.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என உலகுக்கு அறிவித்த தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி, இனி உலகெங்கும் பயணம் செய்வோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி, தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில், அறிவியல் வழிநின்று நிறுவுவதே நமது அரசினுடைய தலையாய கடமை” எனவும் அவர் தெரிவித்தார்.

# ஒக்ரோபர் 4இல் மாநிலங்களவை தேர்தல்

*சென்னை, செப். 10*

தமிழகத்தில் காலியாக உள்ள 2 மாநிலங்களவைத் தேர்தலுக்கு வரும் ஒக்ரோபர் 4 அன்று தேர்தல் நடத்தப்படும் எனத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கடந்த மே மாதம் மாநிலங்களவை உறுப்பினர் பதவியிலிருந்து அதிமுகவின் கே.பி. முனுசாமி, வைத்திலிங்கம் ஆகியோர் ராஜினாமா செய்தனர். 2021 சட்டப்பேரவைத் தேர்தலில், கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட கே.பி.முனுசாமியும், தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தொகுதியில் போட்டியிட்ட வைத்திலிங்கமும் வெற்றி பெற்றனர். இதையடுத்து இருவரும் தங்களது மாநிலங்களவை பதவியை ராஜினாமா செய்தனர்.

இவ்விரு எம்.பி.இடங்களும்



காலியாக உள்ள நிலையில், அதனை நிரப்பத் தேர்தல் ஆணையம் தேர்தல் திகதியை அறிவித்துள்ளது.

அந்த அறிவிப்பில், “தமிழகத்தில் காலியாகவுள்ள 2 மாநிலங்களவை இடங்களுக்கு வரும் ஒக்ரோபர் மாதம் 4ஆம் தேதி தேர்தல் நடைபெறும். அன்று காலை 9 மணி முதல் 4 மணிவரை தேர்தல் நடைபெறும். அன்றைய தினமே மாலை 5 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். இதற்காகச் செப்டம்பர் 22ஆம் திகதி வேட்பு மனுவைத் தாக்கல் செய்யக் கடைசி நாள். வேட்பு மனு பரிசீலனை 23ஆம் திகதி நடைபெறும். வேட்பு மனுவைத் திரும்பப் பெற 27ஆம் திகதி கடைசி நாள்” என்று தெரிவித்துள்ளது.

# சட்டசபை கூட்டம் நடக்கும் கலைவாணர் அரங்க வளாகத்தில் தீக்குளிக்க முயற்சி

## மடக்கிப் பிடித்த பொலிஸார் தீவிர விசாரணை

*சென்னை, செப். 10*

தமிழக சட்டசபை கூட்டம் நடந்து வரும் கலைவாணர் அரங்க வளாகத்தில் தீக்குளிக்க முயன்றவரால் பரபரப்பு ஏற்பட்டது. நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இச்சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்திவருகின்றார்கள்.

கொரோனா காரணமாக தமிழக சட்டசபை கூட்டம் கலைவாணர் அரங்கில் நடந்து வருகிறது. இதற்காக பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை பத்திரிகையாளர் என்று கூறிக்கொண்டு ஒருவர் கலைவாணர் அரங்க வளாகத்திற்குள் நுழைந்தார்.

பொலிஸார் அவரை விசாரித்த போது, திடீரென அவர் தனது வயிற்று பகுதியில் மறைத்து வைத்திருந்த கொள்கலனை



எடுத்து அதிலிருந்த மண்எண்ணெயை உடலில் ஊற்றி தீக்குளிக்க முயன்றார். முரிதமாகச் செயல்பட்ட பொலிஸார் அவரிடம் இருந்து மண்எண்ணெய் கொள்கலனை பறித்ததுடன், அவர் மீது தண்ணீர் ஊற்றி, தீக்குளிக்கும் முயற்சியை தடுத்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில் அவரின் பெயர் ஆறுமுகம் என்பதும், தஞ்சையைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்தது. இந்த சம்பவத்தால் சட்டசபை கூட்டம் நடக்கும் கலைவாணர் அரங்கம் பரபரப்பாக காணப்பட்டது. பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றார்கள்.

# அரசிலிருந்து வெளியேறும் தீர்மானம் எதுவும் இல்லை

## சு.கவின் பிரசார செயலர் கூறுகிறார்

கொழும்பு, செப். 10

**“அரசிலிருந்து வெளியேறி, மாற்று அரசியல் கூட்டணியை அமைக்கும் தீர்மானத்தை கட்சியின் மத்தியசெயல்குழு எடுக்கவில்லை.” - என்று சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரசார செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சாந்த பண்டார தெரிவித்தார்.**



சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் மாற்று அரசியல் கூட்டணியொன்றை உருவாக்க வேண்டும் என கட்சியின் மத்திய செயல்குழு தீர்மானித்துள்ளது என வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பலரும், பலவிதமான கருத்துகளை முன்வைத்திருந்தாலும் கட்சியின் மத்திய செயல்குழுவில் அவ்வாறானதொரு முடிவு எடுக்கப்படவில்லை. கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ஒருவரால் வெளியிடப்பட்டதாக கூறப்படும் தகவலானது அவரின் தனிப்பட்ட கருத்தாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தோம். எனவே, அவருக்கான ஆதரவு தொடரும். அதேபோல கட்சியை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையும் கீழ்மட்டத்தில் இருந்து முன்னெடுக்கப்படும். அரசிலிருந்து வெளியேறும் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை -என்றார்.

# வவுனியாவில் ஒரு கிராமத்தில் 43 பேருக்கு கொரோனா தொற்று

வவுனியா, செப். 10

வவுனியா, சாந்தசோலை கிராமம் கொரோனா தொற்று காரணமாக அபாய நிலையை அடைந்துள்ளதுடன் கிராமத்தில் 43 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா, சாந்தசோலை கிராமத்தில் கொரோனா தொற்று அபாயம் இருப்பதாக கிராமத்தின் பொது அமைப்புக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக சுகாதாரப் பிரிவினரால் கடந்த சனிக்கிழமை சாந்தசோலை கிராமத்தில் அன்ரிஜென் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்படி, நோய் அறிகுறி காணப்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின. அதில் 31 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி குறித்த கிராமத்தில் 43 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

கொரோனா அபாயமுள்ள கிராமாக குறித்த கிராமம் காணப்படுவதால் பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் என சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு அரிசி பறிமுதல்

கொழும்பு, செப். 10


பொலனறுவை பிரதேசத்தில் மிகப்பெரியளவில் நடத்தப்படும் அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் வசம் காணப்பட்ட பெருந்தொகையான அரிசியை அரசுடமையாக்கும் நடவடிக்கை, நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்படி, நிபுண, லத்பந்துர, அரலிய, ஹிரு, நிவ் ரத்ன மற்றும் சூரிய போன்ற அரிசி ஆலைகளில் காணப்பட்ட தொகைகளை கையகப்படுத்தும் நடவடிக்கை, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பொலனறுவை பிரதேசத்தில் நடத்தப்படும் அரிசி ஆலைகளிலிருந்து சந்தைக்கு விநியோகிக்கப்படாத அரிசி , அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையின் கீழ் கையகப்படுத்தப்பட்டதை அடுத்து, அவற்றை சதொச கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு விநியோகிப்பதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

நிவ் ரத்ன அரிசி ஆலையிலிருந்த அரிசியை கையகப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோது, அதன் உரிமையாளரால், திட்டமிடப்பட்ட வகையில் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அதிகாரிகளின் பணிகளுக்கும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

அரசாங்கத்தால் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைகள் நியமிக்கப்பட்டதை அடுத்து, போதுமானளவு உற்பத்தித் தொகையைப் பேணவும் எவ்விதப் பற்றாக்குறையுமின்றி சந்தைக்கான அரிசியை விநியோகிப்பது தொடர்பிலும், அரிசி ஆலை உரிமையாளர்களுடன், அத்தியாவசிய



சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் பேச்சு நடத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், அவர்கள் இணங்கிய விதத்தில் நடந்துகொள்ளாமையால், அரிசி கைப்பற்றப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது அரலிய நிறுவனத்தின் 380,000 கிலோ அரிசி, நிபுன நிறுவனத்தின் 100,000 கிலோ அரிசி, நிவ் ரத்னா நிறுவனத்தின் 200,000 கிலோ அரிசி மற்றும் லத்பந்துர நிறுவனத்தின் 50,000 கிலோ அரிசி பறிமுதல் செய்யப்பட்டது.

இதேவேளை, ஒரு நிறுவனத்தின் அரிசியை கைப்பற்ற முயன்றபோது பிரதேசத்தின் பிக்குகள் அங்கு கூடி எதிர்ப்பு வெளியிட்டனர். இன்னொரு நிறுவனத்தின் வாகனத்தில் ஏற்றப்பட்ட அரிசியை கொண்டு செல்ல முயன்றபோது நிறுவன சாரதியொருவர் வாகனத்தின் சுக்கானை உடைக்க முயன்றார்.

அரிசியை ஏற்றிவர 70 லொறிகள் சென்றபோதும், அவற்றில் 39 லொறிகளிலேயே அரிசி ஏற்றி வர முடிந்ததாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# 2024 இல் ஐ.தே.க. ஆட்சி சாத்தியம் என்கிறார் வஜிர

கொழும்பு, செப். 10

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய கூட்டமொன்று கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தலைமையில் நடைபெற்றது. கட்சி மாநாடு, கட்சியின் அடுத்த கட்ட நகர்வுகள் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் இதன்போது அலசி ஆராயப்பட்டுள்ளது.

அப்போது, “ 2024 இல் ஆட்சியைப் பிடிப்போம் என்று நீங்கள் அடிக்கடி கூறிவருகின்றீர்கள். அதற்கான திட்டம் என்ன, இது உண்மையா” - என உறுப்பினர் ஒருவர் வஜிரவிடம் வினா எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்த வஜிர அபேவர்த்தன, “ஆம். 2024 இல் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைக்கும். இதனை தெளிவாக டயரியில் குறித்து வைத்



துக்கொள்ளுங்கள். வியூகம் பற்றி இப்போதே கூறமுடியாது.” - என்றார்.

அதேவேளை, கடந்த வாரம் ஆளுங்கட்சி கூட்டமொன்றும் நடைபெற்றுள்ளது. இதன்போது அரிசி மற்றும் சீனி மாபியாக்களுக்கு கட்டாயம் முடிவு கட்டவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரமே ஜனாதிபதியால் சில அதிரடி முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

# கொரோனா தடுப்பூசியின் விலை 10 தொடக்கம் 12 இலட்சம் ரூபாய்!

## சட்டவிரோத கும்பல் சிக்கியது

கொழும்பு, செப். 10

கொரோனா தொற்றால் தீவிரமாக பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு விசேட மருத்துவ நிபுணர்கள் பரிந்துரை செய்துள்ள Tocilizumab என்ற தடுப்பூசிகளை, சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவந்து அதை 10 முதல் 12 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்துவந்த மோசடிக் கும்பல் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போதே இந்த மோசடி கண்டறியப்பட்டது.

சுவிற்சலாந்தின் ரோஜா என்ற பிரபல நிறுவனத்தினால் இந்த தடுப்பூசி பதிப்புரிமை பெற்று தயாரிக்கப்படுகிறது.

அதன்படி இந்த தடுப்பூசிகள் இந்தியாவில் உள்ள கடத்தல்காரர்களால் கொண்டு வரப்பட்டதோடு, இவை போலியான முறையில் துருக்கியில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகள் எனவும் விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த தடுப்பூசிகள் சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதோடு, கைதுசெய்யப்பட்ட இருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது 07 தொடக்கம் 10 இலட்சம் ரூபாய் வரையில் தரகர்களின் ஊடாக விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

சமீபத்தில் இந்த தடுப்பூசியின் தேவைப்பாடு தொடர்பில் பாராளுமன்றிலும் விவாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் டெல்டா அபாயம்!

## பணிப்பாளர் சுகுணன் எச்சரிக்கை



மட்டக்களப்பு, செப். 10

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருந்து பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மாதிரிகளில் 95 வீதமானவை டெல்டா தொற்றுக்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜி.சுகுணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 4ஆம் திகதி கல்முனைப் பிராந்தியத்தில் இருந்து புறப்பட்ட பி.சி.ஆர் மாதிரிகள் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக இரசாயன பகுப்பாய்வு பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

18 பி.சி.ஆர் மாதிரிகளில் 17 பி.சி.ஆர் மாதிரிகள் கோவிட் டெல்டா வைரஸ் தொற்றுக்கும் ஒரு பி.சி.ஆர் பரிசோதனை மாதிரி கோவிட் அல்பா வைரஸ் தொற்றுக்கும் உள்ளாகி உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் வேகமாக பரவக்கூடியதும் மிகவும் அச்சுறுத்தலானதும் என்பதனால் பொது மக்கள் நிலைமையைக் கருத்திற்கொண்டு பொறுப்புடன் நடந்து கொள்வதோடு, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றி தடுப்பூசியை முறையாகப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்-என்றார்.

# 2 தடுப்பூசிகள் பெற்றவர்களுக்கும் டெல்டா வைரஸ் பரவும் ஆபத்து!

கொழும்பு, செப். 10

**உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் அதி வீரியம்மிக்க பரவல் தன்மையுடைய டெல்டா வைரஸ் திரிபானது, இரு தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்டவர்களுக்கும் தொற்றக்கூடிய தன்மை உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.**

டெல்டா திரிபானது முழுமையாக தடுப்பூசிகளை செலுத்திக்கொண்ட வர்களுக்கும் தொற்றக்கூடிய நிலை உள்ளதாக, சர்வதேச விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

'நேச்சர்' சஞ்சிகை வெளியிட்டுள்ள ஆய்வு முடிவொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெல்டா திரிபானது, மனிதர்களின் நோய் எதிர்ப்பு கட்டமைப்பை கடந்து செல்லக்கூடியது என அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, டெல்டா கொரோனா திரிபுக்கு, நோய் எதிர்ப்பு கட்ட மைப்பை கடந்து செல்லக் கூடிய ஆற்றல் உள்ளதாக ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல் துறை பிரிவின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டியே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களும் சுகாதார வழிமுறைகளை கடைப்பிடித்து செயல்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# லாப் எரிவாயு சிலிண்டரின் விலை மேலும் அதிகரிக்கும்

கொழும்பு, செப். 10

லாப் நிறுவனத்தின் 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலையை மேலும் 291 ரூபாயால் அதிகரிக்க, நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

அதன்படி, 5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலையை 114 ரூபாயால் உயர்த்த அனுமதி கோரப்பட்டுள்ளது.

நிறுவனத்தால் விடுக்கப்பட்ட புதிய கோரிக்கையின் படி, எரிவாயுவின் விலையை அதிகரிக்க அனுமதித்தால், 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 2147 ரூபாயாகவும், 05 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 858 ரூபாயாகவும் அதிகரிக்கும்.

தற்போது சந்தையில் 12.5 கிலோ எடையுள்ள லாப் எரிவாயு சிலிண்டரின் விலை 1856 ரூபாயாகவும், அந்த வகை 05 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 743 ரூபாயாகவும் உள்ளது.

அதே நேரத்தில், லிட்ரோ நிறுவனம் இதுவரை விலையை உயர்த்தவில்லை .12.5 கிலோ லிட்ரோ எரிவாயு சிலிண்டர் 1493 ரூபாய் மற்றும் 5 கிலோ எரிவாயு சிலிண்டர் விலை 598 ரூபாய் ஆகும். (அ)

# வவுணதீவில் கொரோனாவால் 10 வயது சிறுவன் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, செப். 10

மட்டு. வவுணதீவில் கொரோனாவினால் 10 வயதுச் சிறுவனின் முதல் மரணம் பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார பிராந்திய சேவைகள் பணிமனையில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மட்டக்களப்பில் கடந்த 24 மணித்தியாலயத்தில் கொரோனா வைரஸினால் 4 பேர் உயிரிழந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் வவுணதீவு சுகாதார அதிகாரி பிரிவில் 10 வயது சிறுவன் உட்பட 4 பேர் உயிரிழந்தனர் என அவர் கூறினார்.

இதனையடுத்து, மட்டக் களப்பில் கொரோனா வைரஸினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 264ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# நல்லிணக்க முயற்சிகளுக்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பு

## தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக பதவியில் இருந்து விலகவுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் கூறியுள்ளார்.

மனித உரிமை பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியமானது என குறிப்பிட்ட அவர், அனைவரும் மனித உரிமைகளை மதித்து செயல்படவேண்டும் என அழைப்பு விடுத்தார்.

ஜனநாயக அரசாங்கமொன்று அந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் பொறுப்பு கூற வேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு என்பதனால் கடந்த கால மற்றும் நிகழ்காலத்தில் உள்ள மனித உரிமை பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட்டு அதற்கு நியாயம் வழங்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், நல்லிணக்க முயற்சிகள், நிலைபேறுகால நீதிப் பொறிமுறையையும் சமாதானத்தையும் நிலை நாட்டுவதில் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அலைனா ரெப் லிட்ஸ் குறிப்பிட்டார்.



அத்தோடு பொருளாதார ரீதியில் வெற்றியளிக்கக்கூடிய கொள்கைகளை வகுப்பது குறித்து இலங்கை அரசாங்கம் முனைப்பு காட்ட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# மேலும் 26 பேருக்கு மன்னாரில் தொற்று!

மன்னார், செப். 10

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேலும் புதிதாக 26 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் கடந்த 8 நாட்களில் மன்னார் மாவட்டத்தில் 165 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை காலை விடுத்துள்ள கொரோனா தொற்று நிலவர அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மேலும் புதிதாக 26 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 8 நாட்களில் 165 கொரோனா தொற்றாளர்கள் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ் வருடம் மன்னார் மாவட்டத்தில் 1832 தொற்றாளர்களும், தற்போது வரை மாவட்டத்தில் மொத்தமாக 1,849 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 22 கொரோனா தொற்று மரணம் நிகழ்ந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'பொப் மார்லி' கைது!

கொழும்பு, செப். 10

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான 'பொப் மார்லி' என அழைக்கப்படும் சமிந்த தாப்ரேவ் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தெற்கில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களுடன் இவருக்கு தொடர்பு இருந்துள்ளது.இதனையடுத்து தேடப்பட்ட குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கப்ரால் மத்திய வங்கி ஆளுநராவது உறுதி!

## எம்.பி. பதவி யாருக்கு?

கொழும்பு, செப். 10

நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ஏற்பது உறுதியாகியுள்ளதென ஆளுங்கட்சி எம்.பியான ஜெகத் குமார தகவல் வெளியிட்டுள்ளார்.

இதனால் பாராளுமன்றத்தில் ஏற்படுத்தும் வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பது என்பது குறித்து கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, மத்திய வங்கியின் ஆளுநராக பதவியேற்கவுள்ளேன் என வெளியாகும் தகவலை என்னால் உறுதிப்படுத்தவும் முடியவில்லை. நிராகரிக்கவும் முடியவில்லை என அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் பால்மா பதுக்கிய வர்த்தக நிலையம் சிக்கியது!

மன்னார் பஜார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் அங்கர் பால்மா வை பதுக்கி வைத்து வியாபாரம் மேற்கொண்ட வர்த்தக நிலையத்தில் இருந்து நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை ஒரு தொகுதி அங்கர் பால்மா பெட்டிகளை மன்னார் மாவட்ட நுகர்வோர் அலுவலக அதிகார சபை அதிகாரிகள் மீட்டனர்.

மன்னார் மாவட்ட நுகர்வோர் அலுவலக அதிகார சபைக்கு நுகர்வோரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக மன்னார் பஜார் பகுதியில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றுக்கு சென்று சோதனைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட நுகர்வோர் அலுவலக அதிகார சபை அதிகாரிகள் குறித்த வர்த்தக நிலையத்தில் பதுக்கி வைத்திருந்த ஒரு தொகுதி அங்கர் பால்மா பெட்டிகளை மீட்டனர். மேலதிக விசாரணைகளை மன்னார் மாவட்ட நுகர்வோர் அலுவலக அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கில் 459 தொற்றாளர்கள் நேற்று முன்தினம் அடையாளம்

## 8 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 10

வடக்கு மாகாணத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை 459 கோவிட்-19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 8 பேர் உயிரிழந்தனர்.

இதன்மூலம் செப்ரெம்பர் மாதத்தின் முதல் 8 நாள்களில் வடக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்து 546 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 121 பேர் உயிரிழந்தனர்.

சுகாதாரத் துறையின் நேற்றைய அறிக்கையின் படி, நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்தில் 178 தொற்றாளர்களும் வவுனியா மாவட்டத்தில் 121 தொற்றாளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 77 தொற்றாளர்களும் முல்லைத்தீவில் 57 தொற்றாளர்களும் மன்னாரில் 27 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 4 பேரும் மன்னார் மாவட்டத்தில் 2 பேரும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா ஒருவரும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர்.

2020 மார்ச் தொடக்கம் நேற்று முன் தினம் வரை வடக்கு மாகாணத்தில் 31 ஆயிரத்து 375 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 530 பேர் கோவிட்-19 தொற்றினால் உயிரிழந்தனர். அதிகப்படியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 651 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 311 பேர் உயிரிழந்தனர்.

# அவசரகால விதிமுறைகள் இராணுவ ஆட்சிக்கு வழி

## மனித உரிமைகள் பேரவைக்கு விக்கி கடிதம்



யாழ்ப்பாணம், செப். 10

**அவசரகால விதிமுறைகள் குறித்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.**

அத்தியாவசிய உணவு பொருள் விநியோகத்துக்காக ஜனாதிபதியினால் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகள் ஓர் இராணுவ ஆட்சிக்கு வழியமைக்கக் கூடியது என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் காணாமல்போன தமிழர்களுக்கு இராணுவமே பொறுப்பு என்ற போதிலும் காணாமல்போனோர் அலுவலகத்துக்கான நியமனங்கள் இராணுவத்தினரின் அணிவரிசைகளில் இருந்தே மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அலுவலகத்தில் இராணுவத்தினர் நியமிக்கப்பட்டிருப்பதால் தாங்கள் அங்கு செல்வதற்கும், சாட்சியம் அளிப்பதற்கும் தமிழ்ப் பொது மக்கள் அஞ்சுவதாகவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு சிங்களம் பேசும் பிரதம செயலாளர் வடக்கு மாகாணத்துக்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டமை, படுகொலைகள் மற்றும் நினைவேந்தலை நடத்துவதற்கு பொலிஸாரினால் தடை ஏற்படுத்தப்பட்டமை குறித்தும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் தமது உறவுகளை தேடியும் நீதிகோரியும் போராட்டத்தில் ஈடுபடுபவர்களை, பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு, குற்றவியல் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஏனைய உளவுப் பிரிவுகளால் மிரட்டப்படும் சம்பவம் குறித்தும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா தொற்றுக்குள்ளான எலியந்த வைட் கவலைக்கிடம்

கொழும்பு, செப். 10

கொரோனா தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மருத்துவர் எலியந்த வைட்டின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மருத்துவர் ஏலியந்த வைட் தற்போது கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதோடு, அவருக்கு ஒட்சிசன் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவர் வைட் இதுவரையில் எந்தவொரு கோவிட் தடுப்பூசியையும் பெற்றிருக்கவில்லை எனவும் வைத்தியசாலைப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஆன்மீகத்தால் கொரோனாவைக் குணப்படுத்த முடியும் என்றும், இதன் மூலம் இந்தியாவில் பலரைத் தான் குணப்படுத்தியுள்ளாரெனவும் மருத்துவர் எலியந்த வைட் முன்னர் கூறிவந்தார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன் இணைந்து இவர் ஆற்றில் புனிதநீர் கலந்த பானைகளை போட்டார்.

எலியந்த வைட் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட மருத்துவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் சில காணிகள் வன பகுதிகளாக அடையாளம்

கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறு குளத்தின் நீரேந்து பகுதிகள் மற்றும் குளத்தின் கீழ் நீண்டகாலமாக பயிர்ச்செய்கை மேற்கொண்டு வந்த விவசாயக் காணிகள் வனவளத் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட் பிரமந்தனாறு குளமானது நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள நடுத்தர குளங்களில் ஒன்றாக காணப்படுகிறது.

இந்தக் குளத்தின் மூலம் 602 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பெரும் போகம் மற்றும் சிறுபோக பயிர்ச் செய்கைளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் வனவளத் திணைக்களத்தினால் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு சொந்தமான குளத்தின் நீரேந்து பிரதேசங்கள் மற்றும் குளத்தின் கீழான பொதுமக்களின் வயல் காணிகள், குளத்தின் வான் பகுதி என்பன வனப் பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டு எல்லைகள் இடப்பட்டுள்ளன.

# 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் சினோபார்ம் ஏற்றும் பணி மன்னாரில்

மன்னார், செப். 10

மன்னார் மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் சினோபார்ம் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.ஏற்கனவே 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் புதன்கிழமை தொடக்கம் மன்னார் மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசி எதையும் பெற்றுக் கொள்ள சகலருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை மன்னார் மாவட்டத்தில் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, நானாட்டான் டிலாசால் பாடசாலை, மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மறிச்சிக்கட்டி அல் ஜெசிரா பாடசாலை மற்றும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றில் 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் முதலாவது சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டது.

மேலும் ஏற்கனவே 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் முதலாவது சினோபார்ம் தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களுக்கும் 2ஆவது சினோபார்ம் தடுப்பூசியும் வழங்கப்பட்டது.



மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தலைமையில் பொது சுகாதார மருத்துவ அதிகாரிகள், தொற்று நோய் விஞ்ஞான பிரிவுக்கான மருத்துவ அதிகாரி, வைத்தியசாலைப் பணியாளர்கள் மற்றும் இராணுவத்தின் உதவியுடன் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் அபிவிருத்தி திட்டங்களை அமைச்சர் நாமல் நேரில் பார்வை

யாழ்ப்பாணம், செப். 10

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று யாழ். மாவட்டத்துக்கான கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் முன்னதாக ஜோன். பொஸ்கோ பாடசாலை அருகில் புனரமைக்கப்பட்டு வரும் குளத்தையும், 'ஐ' திட்ட வீதியையும், வைத்திய சாலை வீதியில் மேற்கொள்ளப் படவுள்ள அபிவிருத்தித் திட்டத்தையும்,யாழ். மாநகர சபை புதிய கட்டடத்தையும் பார்வையிட்டார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சராக மேலதிக பொறுப்பேற்றுள்ள நிலையில், அரசாங்கத்தின் அனுசரணையில் யாழில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்களை நேரில் கண்காணித்து அவற்றை துரிதப்படுத்தும் நோக்கிலேயே அவரின் விஜயம் அமைந்தது.

இதன்போது யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன்,பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன்,பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம் ,யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன்,யாழ்ப்பாண பிரதேச செயலர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் பாசையூரில் நடைபெறும் அபிவிருத்தி திட்டங்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் புனரமைக்கப்படவுள்ள நல்லூர் கலைமகள் விளையாட்டு மைதானம், பல்பரிமாண நகர திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட உள்ள மருதனார்மடம்,மத்திய கல்வி அமைச்சின் கீழ் இடம்பெற்று வரும் தெல்லிப்பழை அருணோதயா பாடசாலைக் கட்டடம், வறுத்தலைவிளானில் காணியற்ற குடும்பங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி திட்டங்கள், நாவற்குழியில் யாழ்ப்பாண - கிளிநொச்சி நீர் விநியோக திட்டத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்.

# அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வுக்கு விரைவில் தீர்வு

## யாழ்ப்பாணத்தில் கூறினார் நாமல்

யாழ்ப்பாணம், செப். 10

தெற்கில் தெய்வேந்திர முனையிலிருந்து வடக்கில் பருத்தித்துறை முனை வரை அரசாங்கத்தினால் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு, அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்துள்ள அவர், அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பார்வையிட்டதன் பின்னர், நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர், "தற்போதைய கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமானது வடக்கு, கிழக்கு,தெற்கு என்று பார்க்காது அனைத்து மக்களுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அதிக அளவிலான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக யாழ்ப்பாண மாநகர சபைக்கு புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அது பல மில்லியன் ரூபாய் மத்திய அரசின் நிதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

அதுபோல பல்வேறுப்பட்ட குளங்கள், வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு செயற்திட்டங்கள் வடக்கு, கிழக்கு பகுதியில் இடம்பெற்று வருகின்றன.

எனவே தற்போதைய அரசாங்கமானது வடக்கு, கிழக்கு, தெற்கு என்று பிரிவினையை பார்க்காது அனைத்து பிரதேசங்களிலும் அபிவிருத்தி திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

எனினும், தற்போது எமக்கு கொரோனா வைரஸ் என்ற ஒரு பிரச்னை காணப்படுகிறது. எனினும் அந்த கொரோனா வைரஸ் என்ற தடையையும் தாண்டி அதனை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தோடு இந்த அபிவிருத்தியையும் அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

அத்தோடு அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்ததாக தற்போது ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது.

எனினும், தற்போது நாட்டின் ஜனாதிபதி தலைமையில் இந்த அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது-என்றார். (அ-03)

**“போராட்டங்களுக்கு செல்ல வேண்டாம் என்று குடும்பத்தினர் கூறுகிறார்கள். அவர்கள் உங்களை கொன்றுவிடுவார்கள். புதன்கிழமை நடந்த பேரணியில் கலந்து கொள்வதற்காக நான் என் சகோதரனுடன் சண்டையிட வேண்டியிருந்தது. நாங்கள் குரல் எழுப்புவது முக்கியம். நான் அஞ்சவில்லை. நான் மீண்டும் மீண்டும் போராட்டத்துக்கு செல்வேன்”**



# ஆப்கானில் கிளர்ந்தெழுந்த பெண்கள்: தலிபான்களுக்கு எதிராக போராட்டம்

“சம உரிமை வேண்டும், பெண்களுக்கு அரசில் இடம் வழங்க வேண்டும்” என்று கோரி- ஏராளமான பெண்கள் புதன்கிழமையன்று காபூல் நகரில் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒரு வீதியில் அணிவகுத்துச் சென்றனர்.

ஒருநாள் முன்னதாக, தலிபான்கள் தங்கள் இடைக்கால அமைச்சரவையை அறிவித்தனர். அதில் ஒரு பெண்கூட இல்லை. பெண்கள் விவகாரத்துக்கான அமைச்சரவையையும் ஒழித்துவிட்டனர்.

“நாங்கள் இதை ஏற்க முடியாது, அதனால்தான் நாங்கள் வீதிக்கு வந்தோம்” என்று பி.பி.சியிடம் கூறினார் சாரா (பெயர் மாற்றப்பட்டது). ஒரு வாரத்துக்குள்ளாக அவர் பங்கேற்ற இரண்டாவது போராட்டம் இது.

“நாங்கள் அமைதியாக அணிவகுத்து வந்தோம். பிறகு ஒவ்வொரு வாகனத்திலும் சுமார் 10 தலிபான்களுடன் நான்கைந்து வாகனங்கள் எங்களைப் பின்தொடர்வதை நான் பார்த்தேன்” என்று போராட்டத்தில் ஈடுபட்ட மற்றொருவரான ஜியா (பெயர் மாற்றப்பட்டது) கூறினார். தங்களைத் தடுத்து நிறுத்தியதாகவும், சவுக்கால் அடித்ததாகவும், மின்சாரத்தை உமிழும் தடிகளால் தாக்கியதாகவும் அந்தப் பெண்கள் கூறுகின்றனர்.

“அவர்கள் இரண்டு முறை என் தோளில் தாக்கினர். என் உடல் முழுவதும் வலியெடுத்தது. இப்போதும்கூட அது வலிக்கிறது, என்னால் கையைக்கூட அசைக்க முடியவில்லை” என்று கூறினார் ஜியா .

“அவர்கள் நிறைய கெட்ட வார்த்தைகளைக் கூறி திட்டினார்கள், எங்களைக் கேவலப்படுத்தினார்கள். அவர்கள் எங்களை நோக்கி அழைத்த பெயர்களை மீண்டும் சொல்வதற்கு எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது.”

“நாங்கள் அனைவரும் அடிபட்டோம். நானும் அடிபட்டேன். வீடுதான் உங்களின் இடம், அங்கே செல்லுங்கள் என்று எங்களிடம் கூறினார்கள்” என்றார் சாரா. போராட்டம் தடுக்கப்படுவதை படமாக்க முயன்றபோது அவரது செல்போனை தலிபான்கள் தட்டி விட்டனர்.

பெண்களின் உரிமைகளுக்கு உறுதியளிப்பதாக தலிபான்கள் கூறியுள்ளனர், பெண்கள் படிப்பதற்கோ வேலைக்குச் செல்வதற்கோ தாங்கள் எதிராக இருக்க மாட்டோம் என்றும் கூறியுள்ளனர்.

ஆனால் ஒகஸ்ட் 15-ஆம் திகதியன்று காபூலுக்குள் நுழைந்து அதிகாரத்தைக் கைப்பற்றியதில் இருந்து பொது சுகாதாரத் துறையில் உள்ளவர்களைத் தவிர, மற்ற அனைத்து பெண்களும், பாதுகாப்பு நிலைமை மேம்படும் வரை வேலைக்குச் செல்லக்கூடாது என உத்தரவிட்டனர்.



1990-களில் தலிபான்கள் அதிகாரத்தில் இருந்தபோது பெண்கள் வேலைக்குச் செல்லாமல் இருந்ததற்கு பாதுகாப்பே முதன்மையான காரணம். இப்போதும் அந்த நிலைமையில் எந்த மாற்றமும் இல்லை என சாராவைப் போன்ற பல பெண்கள் கருதுகிறார்கள்.

அரசுத் துறை ஒன்றில் அவர் ஆலோசகராகப் பணிபுரிந்தார், தனது சொந்த வணிகத்தையும் நடத்தினார். இப்போது தன்னுடைய உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று தனது குடும்பம் அஞ்சுவதாக அவர் கூறுகிறார்.

“போராட்டங்களுக்கு செல்ல வேண்டாம் என்று குடும்பத்தினர் கூறுகிறார்கள். அவர்கள் உங்களை கொன்றுவிடுவார்கள். புதன்கிழமை நடந்த பேரணியில் கலந்து கொள்வதற்காக நான் என் சகோதரனுடன் சண்டையிட வேண்டியிருந்தது. நாங்கள் குரல் எழுப்புவது முக்கியம். நான் அஞ்சவில்லை. நான் மீண்டும் மீண்டும் போராட்டத்துக்குச் செல்வேன். சென்று கொண்டே இருப்பேன். அவர்கள் எங்களைக் கொல்லும் வரை. படிப்படியாக இறப்பதை விட ஒரு முறை இறப்பதே மேல்”

ஜியாவுக்கு திருமணமாகி, அண்மையில் பிறந்த குழந்தை உட்பட நான்கு குழந்தைகள் உள்ளனர். தனது குடும்பத்தினர் தாலிபன்களுக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்க தனது குடும்பம் ஊக்குவிப்பதாக அவர் கூறுகிறார். “தலிபான்கள் இப்போது வந்தவர்கள் இல்லை. அவர்கள் நீண்ட காலமாக இங்குதான் இருக்கிறார்கள். எங்களுக்காக மட்டுமல்ல, அடுத்த தலைமுறையினருக்கும், எங்கள் குழந்தைகளுக்கும் சேர்த்து நாங்கள்தான் உரிமைகளைக் கோர வேண்டும்” என்று அவர் கூறினார்.

“தலிபான்கள் எங்களைக் கண்டு பிடித்து குறிவைக்கலாம் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் போராட்டங்களைத் தொடர வேண்டும்.”

இந்த வார தொடக்கத்தில் ஹெராட்டில் நடந்த போராட்டத்தின் போது, மூன்று பேர் கொல்லப்பட்டனர். கூட்டத்தை கலைக்க தலிபான்கள் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். தலிபான்கள் போராட்டக்காரர்களை சாட்டையால் அடிக்கும் பல வீடியோக்கள் வெளியாகி உள்ளன.

ஆர்ப்பாட்டங்களின்போது செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் தாக்கப்பட்டனர். கடந்த சில நாட்களில் தாலிபன்கள் மிகவும் கொடூரமானவர்களாகத் தோன்றுகிறார்கள். தங்களது ஐந்து செய்தியாளர்கள் புதன்கிழமை கைது செய்யப்பட்டதாக நாளிதழை வெளியிடும் ஆப்கானிஸ்தான் செய்தி நிறுவனமான எடிலாட்ரோஸ் கூறியிருக்கிறது. அவர்களில் இருவர் கேபிள்களால் மோசமாக தாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை தேவைப்படுகிறது.

போராட்டத்தை படமாக்க முயன்றபோது தனது சகாவை தலிபான்கள் மூன்று மணி நேரத்துக்கு மேலாக தடுப்பு காவலில் வைத்ததாக யூரோ நியூஸ் செய்தியாளர் அனலிஸே போர்ஜெஸ் பி.பி.சியிடம் தெரிவித்தார். “அவரது முகத்தில் பல முறை அறைந்தார்கள். அதில் அவர் அதிர்ச்சியடைந்தார். அவருடைய செல்போனையும் பர்ஸையும் பறித்தார்கள்” என்று அவர் கூறினார்.

செவ்வாய்க்கிழமை காபூலில் நடந்த போராட்டத்தை படமாக்கும்போது தடுத்துக் காவலில் வைக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் செய்தியாளரிடமும் பிபிசி பேசியது. ”தலிபான்கள் பல போராட்டக்காரர்களையும் செய்தியாளர்களையும் கைது செய்தனர். எனது செல்போன், மைக் மற்றும் பிற உபகரணங்களை பறித்துச் சென்றனர். அவர்கள் என்னைக் கைகளாலும் புத்தகங்களாலும் பல முறை அடித்தனர். நான் ஒரு செய்தியாளர் என்று சொன்னேன். ஆனால், அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் மற்றவர்களை துப்பாக்கிகளைக் கொண்டு அடிப்பதையும் நான் பார்த்தேன். அவர்கள் எனது எல்லா வீடியோக்களையும் அழித்துவிட்டனர் ” என்று அவர் கூறினார்.

“எனது செல்போன் முகப்பில் ஒரு ஆணும் பெண்ணும் தழுவிக் கொள்வது போன்ற படம் இருந்தது. அதனால் கோபமடைந்த தலிபான் தளபதி என் முகத்தில் கடுமையாக தாக்கினார்.” போராட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களைக் கவனத்தில் கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தானில் உள்ள ஐக்கிய நாடு அவையின் அலுவலகம், “ஆப்கானிஸ்தானின் அனைத்து உரிமை களையும் வன்முறையின்றிப் பாதுகாக்க வேண்டிய கடமை அதிகாரிகளுக்கு உள்ளது” என்று கூறியிருக்கிறது.

ஆனால், போராட்டங்கள் தொடர்பாக தலிபான்கள் வேறு விதமாகப் பதில் அளித்துள்ளனர். போராட்டம் நடத்துவதற்கு நீதித்துறை அமைச்சகத்திடம் இருந்து அனுமதி பெற வெண்டும், பிறகு இடம், நேரம், ஆகியவற்றை பாதுகாப்புத் துறையிடம் அளிக்க வேண்டும். என்னென்ன பதாகைகள், முழக்கங்கள் பயன்படுத்தப்படும் என்பதையும் குறிப்பிட வேண்டும் என தலிபான்கள் கூறியுள்ளனர். இப்போது, ஜியா மற்றும் சாராவுக்கு, அவர்களின் உரிமைகளை கோருவது மேலும் கடினமாகிவிட்டது.

**- பி.பி.சி.**

**தமிழ் சினிமாவில் நூற்றுக்கும் மேற்பட்ட திரைப் படங்களுக்குப் பாடல்களை எழுதிய புலமைப்பித்தன், ஈழ விடுதலைப் போராட்டத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஈழத்தமிழ்ப் போராளிகளைக் காப்பாற்ற வேண்டுமென விரும்பியிருந்தாலும், தமிழீழம் அமைய வேண்டுமென்பதில் அவருக்கு உடன்பாடு இருந்திருக்கவில்லை என்பதைப் புலமைப்பித்தன் வெளிப்படையாகவே கூறியிருந்தார்.**

அ.நிக்ஸன்



# புலமைப்பித்தனின் அரசியலும் ஈழத்தமிழரின் பிரச்னையும்

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தை வெளிப்படையாக ஆதரித்த தமிழ் நாட்டுப் புலவர் புலமைப்பித்தன் சென்னை அடையாறு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை இயற்கை எய்தினார்.

தமிழ் சினிமாவில் நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்குப் பாடல்களை எழுதிய புலமைப்பித்தன், ஈழவிடுதலைப் போராட்டத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஈழத்தமிழ்ப் போராளிகளைக் காப்பாற்ற வேண்டுமென விரும்பியிருந்தாலும், தமிழீழம் அமைய வேண்டுமென்பதில் அவருக்கு உடன்பாடு இருந்திருக்கவில்லை என்பதைப் புலமைப் பித்தன் வெளிப்படையாகவே கூறியிருந்தார்.

விடுதலைப் புலிகள் உள்ளிட்ட விடுதலை இயக்கங்களுடன் நெருங்கிய உறவைப் புலமைப்பித்தன் கொண்டிருந்தார். 1935 ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் கோவை மாவட்டத்தில் பிறந்த புலமைபித்தன் தமிழ் சினிமாவில் மரபு கவிதைகளிலும் பாடல்களை எழுதியிருந்தார்.

குடியிருந்த கோயில் திரைப்படத்தில் இடம்பெற்ற “நான் யார் நீ யார்” என்ற பாடலின் மூலம் தமிழ் சினிமாவில் புகழ்பெறத் தொடங்கிய புலமைப்பித்தன் எண்ணற்ற பாடல்களை எழுதியுள்ளார்.

இதே காலகட்டத்தில்தான் ஈழவிடுதலைப் போராட்டத்தில் அதிக அக்கறை கொண்டிருந்த புலமைப்பித்தன் இரவு பகலாக தமிழகத்தில் தஞ்சமடையும் ஈழப் போராளிகளைக் காப்பாற்றும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தார்.

ஈழப் போராட்டத்துடனான தொடர்புகள் தொடர்பாக ஆங்கில இணையத்தளம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் பல விடயங்களைப் புலமைப்பித்தன் வெளிப்படுத்துகிறார்.

குறிப்பாக அபினுக்கும் கஞ்சாவுக்கும் அடிமைப்பட்டவர்கள் போன்று தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் பதவிக்கும் பட்டத்துக்கும் ஆசைப்பட்டுக் கிடக்கிறார்கள். இவர்கள் ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு ஒருபோதும் ஒத்துழைக்கமாட்டார்கள் என்று அவர் அந்த நேர்காணலில் விபரிக்கிறார்.

தமிழக அரசியல் தலைவர்களை நம்பிச் செயல்பட வேண்டாம். நீங்கள் உங்கள் காலிலே நின்று போராட்டத்தை நடத்துங்களென அன்று கூறினாரென அவர் சொல்கிறார்.

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள போராளிகளை நாடு கடத்தமாட்டேன். ஆனால், தமிழீழத்துக்கு ஆதரவு இல்லையென இந்திரா காந்தி கூறினார். பங்களாதேஷ் நாட்டைப் பிரித்துக் கொடுத்தது போன்று தமிழீழத்தையும் பிரித்துக் கொடுக்கலாம். ஆனால், அது இந்தியாவுக்கே ஆபத்தாகிவிடுமெனவும் இந்திரா காந்தி எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ஏனெனில் தமிழ் நாடும் பிரிவினையைக் கோரும் என்ற அச்சம் இருந்ததாலேயே தமிழீழத்தைப் பிரித்துக் கொடுக்க இந்திரா காந்தி அச்சமடைந்திருந்தார்.

ஆனால், தமிழகம் ஒருபோதும் பிரிவினையைக் கோராது எனவும் நீங்கள் தமிழீழத்தைப் பிரித்தே கொடுங்கள் என்றும் தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் 1981 ஆம் ஆண்டு நடந்த நிகழ்வு ஒன்றில் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும் புலமைப் பித்தன் அந்த நேர்காணலில் விளக்கமளித்திருக்கிறார்.

அதேவேளை இந்தியாவில் இருப்பது கூட்டாச்சி அல்ல. ஏனெனில், எந்த விதமான அறிவிப்புகளும் இன்றி மத்திய அரசு மாநில அரசு ஒன்றைக் கலைத்து விடும் அதிகாரமுடையது. அரசியலமைப்பின் 356 பிரிவை மத்திய அரசு பயன்படுத்தும். அதனாலேதான் தமிழகத் தலைவர்கள் மத்திய அரசுடன் பகைத்துக் கொள்ளாமல் ஆட்சி புரிகின்றார்கள்.

ஆகவே ஈழ விடுதலைப் போராட்டத்தில் அக்கறை செலுத்துவார்கள் என்று ஈழத் தமிழர்கள் நம்பக்கூடாது. இந்தியாவில் இருப்பது ஒரு கொத்தடிமை ஆட்சி. அதாவது அழுவதற்குக்கூட உரிமையில்லாத மாநிலத்தில் ஆட்சிபுரியும் தமிழகத் தலைவர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று ஈழத்தமிழர்கள் எவ்வாறு நம்புவது எனவும் புலமைப்பித்தன் கேள்வி எழுப்பியிருந்தார்.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான மனநோய் கொண்டவர்களே இந்தியப் புலனாய்வுத் துறையில் அதிகமாக இருக்கின்றனர். இந்தப் புலனாய்வுத் துறையே ஈழப் போராட்டத்துக்கு தீங்கு விளைவித்தது.

இந்திய அமைதிப்படைக்குத் தளபதியாக இருந்த ஹரிஹரசிங் தான் எழுதிய நூல் ஒன்றில் இந்திய இராணுவத்தின் செயல்பாடுகளை வெளிப்படையாகவே விபரித்திருக்கிறார். அந்த நூலை வாசித்தாலே உண்மை வெளிப்படும் என்றும் புலமைப்பித்தன் சொல்லியிருக்கிறார்.

இன்றுகூட இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்குப் பெருமளவு பணம் கொடுத்து உதவி புரிகின்றது. ஆனால் ஈழத் தமிழர்கள் விடயத்தில் அக்கறை செலுத்தவில்லை எனவும் புலமைப்பித்தன் அந்த நேர்காணலில் கவலை வெளியிட்டிருந் தார்.

இந்திரா காந்தி. தமிழக முதலமைச்சர்களாக இருந்த கருணாநிதி. எம்.ஜி.ஆர் மற்றும் வைகோ ஆகியோருடன் ஈழத்தமிழ் போராளிகளுக்குச் செய்ய வேண்டிய உதவிகள் மற்றும் அரசியல் விடுதலையைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய வழிமுறைகள் குறித்துத் தான் நடத்திய சந்திப்புகள், உரையாடல்கள் தொடர்பான நீண்ட விளக்கம் ஒன்றை அந்த நேர்காணலில் புலமைப்பித்தன் வழங்கியுள்ளார்.

இதேவேளை மறைந்த புலமைப்பித்தன் விஜய் நடிப்பில் அண்மையில் வெளியான தெறி திரைப்படத்தில் இடம்பெற்ற வளைகாப்பு பாடலான தாய்மை வாழ்கென தூய செந்தமிழ் பாடல் ஒன்றைப் புலமைப்பித்தன் எழுதியுள்ளார். எம்ஜிஆர், ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அரசவைக் கவிஞராகவும், அ.தி.மு.க. அவைத் தலைவராகவும் இவர் பதவி வகித்துமிருந்தார்.

இராமசாமி என்ற இயற்பெயர் கொண்ட புலமைப்பித்தன் சென்னை சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். மரபுக் கவிதைகளில் தோய்ந்த புலமைப்பித்தன் குடியிருந்த கோயில் திரைப்படத்தில் “நான் யார் நான் யார்” பாடலின் மூலம் அமரர் எம்.ஜி.ஆரின் அபிமானத்தைப் பெற்றார். பின்னர் அடிமைப் பெண் படத்தில் “ஆயிரம் நிலவே வா...” போன்ற பாடல்களையும் எழுதிப் பிரபல்யமடைந்தார்.

இதயக்கனி திரைப்படத்தில் “நீங்க நல்லா இருக்கணும் நாடு முன்னேற” என்ற மிகவும் புகழ்பெற்ற பாடலை எழுதியவரும் இவரே. சிரித்து வாழ வேண்டும், ஓடி ஓடி உழைக்கணும் உள்ளிட்ட இவர் எழுதிய ஏராளமான சமூக அக்கறையுள்ள பாடல்கள் தமிழ் சினிமா ரசிகர்கள் மத்தியில் மறையாத இடத்தைப் பெற்றுத் தந்தன.

2015 ஆம் ஆண்டு நகைச்சுவை நடிகர் வடிவேலு நடித்த எலி என்ற படத்தில் தனது கடைசி பாடல்களை இவர் எழுதியிருந்தார். ■

# 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் வினாத்தாள் கணக்கீடு - I
ஆசிரியர் : கே.பாலகஜன்
நேரம் : 2 மணித்தியாலங்கள்

கல்வி tv CHANNEL

**6)** **வரையறுக்கப்பட்ட பிரியங்கா** பொதுக்கம்பனியொன்றின் **வரிக்கு முன் இலாபத்தினைக்** கணிப்பிடுவதற்கு **தெரிவு செய்யக்கூடிய சரியான சமன்பாடு பின்வருவனவற்றுள் எது?**

1. மொத்த வருமானம் – மொத்தச் செயற்பாட்டுக்கிரயம் + வருமானவரி – செலுத்திய பங்கு இலாபம்
2. இறுதி தேறிய சொத்து – ஆரம்ப தேறிய சொத்து + செலுத்திய பங்கு இலாபம் – கூறப்பட்ட மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு
3. இறுதி தேறிய சொத்து – ஆரம்ப தேறிய சொத்து + செலுத்திய பங்கு இலாபம் + வருமான வரி + கூறப்பட்ட மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு
4. தேறிய சொத்து அதிகரிப்பு + செலுத்திய பங்கு இலாபம் + வருமான வரிச்செலவு – கூறப்பட்ட மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு
5. தேறிய சொத்து அதிகரிப்பு + செலுத்திய பங்கு இலாபம் + வருமானவரிச் செலவு + கூறப்பட்ட மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு

(.............)

**7)** பின்வருவன **தர்சினி வியாபாரத்தின் 2021 செப்ரெம்பர்** மாதத்திற்காக ஊழியருக்குச் செலுத்திய **தேறிய சம்பளம்** ரூபா.700000 ஆகும். இது ஊழியரின் **ஊழியர் சேமலாப நிதியம்** (EPF) 10% இனையும், சம்பள முற்பணம் ரூபா.20000 இனையும் கழித்துக் கொண்டு செலுத்திய பெறுமதியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அத்துடன் தொழில் கொள்வோரினால் **ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) 15%** உம், **ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) 3%** உம் பங்களிப்புச் செய்தல் வேண்டும். குறித்த மாதத்திற்கான EPF, ETF என்பன அடுத்து வரும் மாதத்தின் **10 ஆம் நாளில்** அனுப்பப்படுவதுடன் **தேறிய சம்பளமானது அதே மாதத்தில் செலுத்தப்படுகின்றது. 30.09.2021** இல் உள்ளவாறான **தர்சினி வியாபாரத்தின் ஊழியர் தொடர்பாக ஏற்பட்ட மொத்தச் செலவீனமும், மொத்தப் பொறுப்பும் முறையே**

1. ரூபா.720000, ரூபா.224000
2. ரூபா.826000, ரூபா.944000
3. ரூபா.926000, ரூபா.244000
4. ரூபா.944000, ரூபா.224000
5. ரூபா.826000, ரூபா.196000

(.............)

**8)** **ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள்** தொடர்பில் **பிற்காலக் கொடுப்பனவுகளினை** மூலதனச் செலவுகளாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் **பெறுமதியுடன்** சேர்த்துக் கொள்வதற்கு **அடிப்படை வழங்கும் எண்ணக்கரு** பின்வருவனவற்றுள் எது?

1. தேறல் எண்ணக்கரு
2. இணைத்தல் எண்ணக்கரு
3. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
4. பொருண்மை எண்ணக்கரு
5. தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்

(.............)

**9)** பின்வரும் விடயங்கள் தொடர்பாக **பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவினை முறையாக வெளிக்காட்டுவது.**

A - **குறித்த காலப்பகுதியில்** உழைக்கப்படாத வருமானத்தினை **பொறுப்பாக நிதிநிலைமைக்கூற்றில்** வெளிக்காட்டுவதற்கு அடிப்படை வழங்குவது.

B - நிறுவனமானது **நிதிக்கூற்றுக்களினூடாக** வியாபார வருமதிகள் **முறிவடைதலினை வெளிப்படுத்தாமையினை** மீறும் எண்ணக்கரு

1. அட்டுறு, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருக்கள்
2. அட்டுறு, பணஅளவீட்டு எண்ணக்கருக்கள்
3. கால அளவீடு, அட்டுறு எண்ணக்கருக்கள்
4. அட்டுறு, வரலாற்றுக்கிரய எண்ணக்கருக்கள்
5. பாதுகாப்பு, இணைத்தல் எண்ணக்கருக்கள்

(.............)

**10)** **குத்தகை அடிப்படையில்** கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரமொன்றினை **நிதிநிலைமைக்கூற்றில் சொத்தினைப் பயன்படுத்தும் உரிமைச்** சொத்தாக வெளிக்காட்டுவதற்கு மிகவும் **பாதுகாக்கப்படும் கணக்கீட்டுத் தகவல்களின் பண்புசார் குணாதிசயம்**

1. ஒப்பிடக்கூடிய தன்மை
2. உண்மையான பிரதிநிதித்துவம்
3. காலந்தவறாமை
4. விளங்கிக்கொள்ளக்கூடிய தன்மை
5. உறுதிப்படுத்தக்கூடிய தன்மை

(.............)

- **11,12 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

**மின்விசிறி, தொலைபேசிகளை** விற்பனை செய்யும் **விதுர்சன் பொதுக்கம்பனி (PLC) இன் 2021.03.31** இல் உள்ளவாறான இருப்புக்களின் பெறுமதி பின்வருமாறு:

| **இருப்புக்கள் (உருப்படி)** | **கிரயம் (ரூபா000)** | **தேறிய தேறக்கூடிய நிகரப்பெறுமதி (ரூபா000)** |
|---|---|---|
| மின்விசிறி | 2400 | 2600 |
| தொலைபேசிகள் | 3700 | 3200 |

**2021.03.31** இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான விற்பனை (ரூபா000) 197000 ஆகும். அத்துடன் நிறுவனம் **விற்பனை விலையில் 10% இலாபத்தினைச்** சேர்த்து **பொருட்களினை விற்பனை செய்கின்றது.**

**11)** **LKAS-02** இற்கமைய **2021.03.31** இல் உள்ளவாறான **நிதிநிலைமைக்கூற்றில் இருப்பாக முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி** யாது?

1. ரூபா.5600000
2. ரூபா.5800000
3. ரூபா.6100000
4. ரூபா.5000000
5. ரூபா.6900000

(.............)

# நாட்டில் எந்த நேரத்திலும் நிலைமை மோசமாகலாம்

## மக்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும் சுகாதார அமைச்சர் கெஹலிய அறிவுறுத்து

கொழும்பு, செப். 10

**"இலங்கையில் மீண்டும் எந்த நேரத்திலும் மோசமான கொரோனாத் தாக்கம் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே, மக்கள் பொறுப்புடன் செயல்பட்டால் மாத்திரமே சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்."**

- இவ்வாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பயணக்கட்டுப்பாடு பிறப்பிக்கப்பட்ட காரணத்தால் கடந்த காலத்தை விடவும் குறிப்பிட்ட அளவு ஆரோக்கியமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன. புதிய வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், மக்களின் செயல்பாடுகளில் முழுமையான திருப்தி இல்லை. இலக்கை நோக்கி எம்மால் பயணிக்க முடிந்த போதிலும் இலக்கைத் தக்கவைக்க முடியவில்லை. அதற்கு மக்களின் செயல்பாடுகளே காரணமாகும்.

மக்கள் பொறுப்புடன் செயல்பட்டால் மாத்திரமே எம்மால் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சுகாதார அமைச்சு, சுகாதாரப் பணியகம் மூலமாக பல்வேறு சுகாதார வழிகாட்டிகள், கட்டுப்பாட்டு வழிமுறைகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் மக்கள் அதனை முழுமையாகப் பின்பற்றுவதில் சந்தேகம் உள்ளது. ஒரு சிறிய குழு தவறு செய்கின்றது.

இதனால் பெருமளவிலான மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதை சகலரும் கவனத்தில்கொள்ள வேண்டும். இப் போது நிலைமை கட்டுப் பாட்டில் உள்ளது.

ஆனால், எப்போதும் மீண்டும் மோசமான கொரோனாத் தாக்கம் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.



கண்ணுக்குத் தெரியாத ஓர் எதிரியுடன் போராடுகின்றோம் என்பதை சகலரும் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்" - என்றார். (இ)

# மேலும் 637 பேர் கைது!

கொழும்பு, செப். 10

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 637 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 41 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 67 ஆயிரத்து 979 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

## வவுனியாவில் மேலும் 123 பேருக்கு தொற்று

வவுனியா, செப். 10

வவுனியாவில் மேலும் 123 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 123 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)



## அதிக பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் சிக்கினார்!

கொழும்பு, செப். 10

களனி - வனவாசல பகுதியில் ஒரு கிலோ 65 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்ட போதைப்பொருளின் மொத்த பெறுமதி 120 இலட்சம் ரூபாய்வுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# விதிமுறையை மீறுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

## மக்களுக்கு பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை

கொழும்பு, செப். 10

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவரும் பொதுமக்கள் சமூக இடைவெளியைப் பேணி, சுகாதார பரிந்துரைகளுக்கு அமையச் செயல்பட வேண்டும்.

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வரும் சிலர் சமூக இடைவெளியைக் கவனத்தில் கொள்ளாது நடந்துகொள்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது.

சமூக இடைவெளி மற்றும் முறையான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாத மக்களுக்கிடையே கொரோனாத் தொற்று நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.



எனவே, சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் கைது செய்யப்படுவார்கள். அத்துடன் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (இ)

# பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசியே சிறந்தது

## அரசிடம் மருத்துவ அதிகாரிகள் சங்கம் பரிந்துரை

கொழும்பு, செப். 10

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படக்கூடிய சிறந்த தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியே உள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் எடுத்துரைத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்கும், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினரான மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார். (இ)




# பிரான்ஸ், ஜேர்மன், சுவிற்சர்லாந்தில் பனை உற்பத்திகள் விநியோகம்

பாரிஸ், செப். 10

பனை அபிவிருத்திச் சபையின் முயற்சியின் பயனாகவும் வரலாற்றில் முதன் முறையாகவும், பிரான்ஸ், ஜேரமன், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கு பனை உற்பத்திகள் விநியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு, விடயத்துக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தலைமையில் பாரிஸ் நகரில் இடம்பெற்றது.



பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிருஷாந்த பதிராஜ மற்றும் விநியோகஸ்தர்களாக நியமனம் பெற்றுள்ள டியூக் இளங்கோ, அருமைத்துரை சிவராவூரன் ஆகியோருக்கு இடையிலான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஷனிகா ஹிரிம்புரேகம மற்றும் தூதரக அதிகாரிகளும் இதன்போது கலந்துகொண்டனர்.



# மருத்துவமனையில் தீ; 10 பேர் உடல்கருகி பலி!

## வடக்கு மசிடோனியாவில் சம்பவம்

ஸ்கோப்ஜே, செப். 10

வடக்கு மசிடோனியாவில் கொரோனா தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி குறைந்தது 10 பேர் பலியாகினர்.

டெட்டோவோ நகரத்தின் ஒரு முக்கிய வீதிக்கு அருகிலுள்ள வைத்தியசாலை கட்டடமே தீப்பிடித்து எரிந்தது. புதன்கிழமை இரவு இந்தத் தீப்பரவல் ஏற்பட்டது. தகவலறிந்து அங்கு விரைந்த தீயணைப்பு படையினர் ஒரு மணி நேரத்திற்குள் தீயை அணைத்தனர்.

இந்தத் தீவிபத்தில் பலர் மோசமாகக் காயமடைந்துள்ளனர். இதனால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என வடக்கு மசிடோனியா சுகாதார அமைச்சர் வெங்கோ பிலிப்ஸ் கூறியுள்ளார்.

நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்பட்ட ஒட்சிசன் சிலிண்டர் வெடித்து இந்தத் தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

# எரிபொருளை இனியும் எடுப்பது உலகை ஆபத்திலேயே தள்ளும்!

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை



லண்டன், செப். 10

60வீதமான எண்ணெய், எரிவாயு என்பனவும், 90 வீதமான நிலக்கரியும் பூமிக்கு அடியிலேயே இருந்தால்தான் பூமி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்த முடியும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

உலகின் எரிபொருள் தேவை மற்றும் விநியோகத்தை அடிப்படையாகக்கொண்டு நடத்தப்பட்ட ஆய்வு முடிவில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

'நேச்சர்' இதழில் ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வருங்காலத்தில் பூமிக்கு அடியில் இருந்து கிடைக்கும் எரிபொருள்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு முன்பு கணித்ததைவிடக் குறைவாகவே இருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

உலகம் முழுவதும் தோண்டி எடுக்கப்படும் எரிபொருள்களின் அளவு 2020ஆம் ஆண்டில் உச்சத்தை எட்டி, பின்னர் 2050ஆம் ஆண்டு வரை படிப்படியாக ஆண்டுக்கு 3% என்ற அடிப்படையில் குறைய வேண்டும் என்று விஞ்ஞானிகள் கணித்திருந்தார்கள். ஆனால், அது அப்படி நடக்கவில்லை.

"கோவிட் பெருந்தொற்று காரணமாக எரிபொருள்கள் தோண்டி எடுக்கப்படுவது குறைந்திருந்தது. ஆனால், அது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது", என்கிறார் எரிபொருள்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபடும் பேராசிரியரான ஸ்ரீவ் பை. (ஐ)

# சர்வதேச விண்வெளி நிலையத்தில் கரும்புகை எழுந்ததால் அபாய ஒலி!



மொஸ்கோ, செப். 10

சர்வதேச விண்வெளி நிலையத்தில் பிளாஸ்ரிக் கருகும் வாசனை ஏற்பட்டதாக ரஷ்ய கலனில் இருந்து அமெரிக்காவின் நாஸா கலனில் இருப்பவர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

சில மணி நேரத்தில், இந்த பிரச்னை சரி செய்யப்பட்டு விட்டதாக ரஷ்ய விண்வெளி அமைப்பான ராஸ் கோமாஸ் தெரிவித்துள்ளது.

கருகும் வாசனை வந்தபோது விண்வெளி நிலையத்தின் பற்றரிகள் "சார்ஜ்" ஆகிக் கொண்டிருந்தன. அப் போது புகை எழுந்ததாக ரஷ்ய விண்வெளி நிலையமான ராஸ் கோமாஸ் தெரிவித்துள்ளது.

தற்போது இந்த பிரச்னை சரி செய்யப்பட்டு, விண் வெளி நிலையம் இயல்புநிலை திரும்பி விட்டதாகவும் ராஸ்கோமாஸ் கூறியுள்ளது.

முன்னதாக, சர்வதேச விண்வெளி நிலையத்தை கட்டமைத்த பொறியியலாளர்களில் ஒருவர், அதிலுள்ள பொருட்கள் பழுதடைந்து விட்டன. இதனால், செயலிழக்கும் - ஆபத்துகள் ஏற்படலாம் என்று எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐடா சூறாவளி, வெள்ளத்தால் அமெரிக்காவில் 82 பேர் பலி!




நியூயோர்க், செப். 10

அமெரிக்காவில் ஐடா சூறாவளி மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 82 ஆக உயர்ந்துள்ளது.

அமெரிக்காவின் லூயிசியானா, நியூயோர்க், நியூஜெர்சி, நியூ ஒர்லின்ஸ் உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களை சூறாவளி கடுமையாக தாக்கியது.

இதனால் ஏற்பட்ட பெரும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டன. பலநூறு வீடுகள் சேதமடைந்தன.

இந்நிலையில், ஐடா புயலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 82 ஆக அதிகரித்துள்ளது. புயலால் ஏற்பட்ட வெள்ளம், மின் தடை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த உயிரிழப்புகள் நிகழ்ந்தன. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அஸ்ட்ரா செனகா தடுப்பூசியால் அரியவகை நரம்புக்கோளாறு!

## ஐரோப்பிய மருந்து கட்டுப்பாட்டு கழகம்

ஆம்ஸ்ரர்டாம், செப். 10

அஸ்ட்ரா செனகா தடுப்பூசி பெற்றவர்களுக்கு மிகவும் அரிதாக நரம்பு கோளாறு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக ஐரோப்பிய மருந்து கட்டுப்பாட்டு கழகம் தெரிவித்துள்ளது.

'கில்லென் - பார்ஸ் சிண்ட்ரோம்' என்று அழைக்கப்படும் அரிய வகை நோய் பாதிப்பானது நோய் எதிர்ப்பு சக்தியால் நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதை குறிக்கிறது.

இது அஸ்ட்ரா செனகா, ஜோன்சன் & ஜோன்சன், மொடர்னா ஆகிய தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்களுக்கு மிகவும் அரிதாக ஏற்பட வாய்ப்பிருப்பதாக ஐரோப்பிய மருந்து கட்டுப்பாட்டு கழகத்தின் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தடுப்பூசியால் ஏற்படும் இந்த பாதிப்பு 'வோக்ஸ்செர்வியா' என்று அழைக்கப்படுகிறது.

இருப்பினும், மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே இந்த பாதிப்பு பதிவானதாகக் கூறப்படுகிறது. கடந்த ஜூலை 31ஆம் திகதி வரை உலகம் முழுவதும் 59.2 கோடி தடுப்பூசிகள் டோஸ்கள் செலுத்தப்பட்டதில், வெறும் 833 பேருக்கு மட்டுமே இத்தகைய நரம்பு கோளாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

# தலை ஒட்டி பிறந்த குழந்தைகள் சத்திர சிகிச்சையால் பிரிந்தனர்!

## இஸ்ரேல் மருத்துவர்கள் சாதனை



ஜெருசலேம், செப். 10

தலை ஒட்டிப் பிறந்த இரட் டைப் பெண் குழந்தைகளை சத்திர சிகிச்சை மூலம் வெற்றிகரமாக பிரித்து இஸ்ரேல் மற்றும் வெளிநாட்டு மருத்து வர்கள் இணைந்து சாதனை படைத்துள்ளனர்.

2020 ஒகஸ்ட்டில் பின் தலை ஒட்டிப் பிறந்த இந்தக் குழந்தை கள் இந்த சத்திர சிகிச்சையின் பின்னர் முதன்முறையாக ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

பீர்ஷெபா நகரில் உள்ள சொரோகா மருத்துவமையத் தில் கடந்த வாரம் சுமார் 12 மணி நேர சத்திர சிகிச்சையின் பின்னர் ஒட்டிப் பிறந்த இரட்டையர்களும் பிரிக்கப்பட்ட னர்.

இந்தக் கடினமான மற்றும் ஆபத்தான சத்திர சிகிச்சையில் இஸ்ரேல் மற்றும் வெளிநாடு களில் இருந்து வந்த 10இற்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர் கள் ஈடுபட்டனர்.

சத்திர சிகிச்சையின் பின்னர் ஒட்டிப் பிறந்த இரட்டைச் சிறுமிகளும் நன்றாக குணம டைந்து வருகின்றனர் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போது இரண்டு குழந் தைகளும் நன்றாக சுவாசிக் கின்றன. ஆகாரங்களை எடுத் துக் கொள்கின்றன என சொரோகா மருத்துவமையத்தி பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவு தலைவர் எல்டாட் சில் பர்ஸ்டீன் தெரிவித்தார்.

ஒட்டிப் பிறந்தவர்களை பிரிக்கும் இவ்வாறான கடின மான மற்றும் ஆபத்தான 20 அறுவைச் சிகிச்சைகள் உலக ளவில் நடந்துள்ளன. எனினும் இஸ்ரேலில் இவ்வாறான முதல் சத்திர சிகிச்சை இதுவாகும். (ஐ)

ஈழநாடு



# உலகக்கிண்ண இந்திய அணி; ஆலோசகராக டோனி நியமனம்!

## அஸ்வினுக்கு அணியில் இடம்

புதுடில்லி, செப். 10

இருபது - 20 உலகக் கிண்ண இந்திய அணியில் தமிழ் வீரரான ரவிச்சந்திரன் அஸ்வின் சேர்க்கப் பட்டுள்ளார். அத்துடன், இந்த அணிக்கு ஆலோசகராக முன்னாள் தலைவர் மகேந்திரசிங் டோனி நியமிக்கப்பட்டுள்ளார்.

இருபது - 20 உலகக் கிண்ணத் துக்கான இந்திய அணி அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த அணியில் சாஹல், ஷிகர் தவான், பிரித்வி ஷா ஆகியோ ருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அணி விவரம்

விராட் கோலி (அணித் தலை வர்), ரோஹித் சர்மா, கே. எல். ராகுல், சூரியகுமார் யாதவ், ரிஷப் பந்த், இஷன் கிஷன், ஹார்திக் பாண்ட்யா, ரவீந்திர ஜடேஜா, ராகுல் சஹர், ரவிச்சந்திரன் அஸ் வின், அக்சர் பட்டேல், வருண் சக்க ரவர்த்தி, ஜஸ்பிரித் பும்ரா, புவ னேஸ்வர் குமார், முஹமது ஷமி.

மேலதிக வீரர்களாக ஸ்ரேயாஸ் ஐயர், ஷர்துல் தாகூர், தீபக் சஹர் ஆகியோர் இணைக்கப்பட்டுள் ளனர். (ஐ)





# உலகக்கிண்ணம் ரி-20: பங்களாதேஷ் அணி!

டாக்கா, செப். 10

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ. சி. சி. இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக் கான 15 பேர் கொண்ட அணியை பங்களாதேஷ் கிரிக் கெட் சபை அறிவித்துள்ளது.

மஹ்மூதுல்லா தலைமையிலான இந்த பங்களாதேஷ் அணி, இருபது - 20 உலகக் கிண்ணத்தின் முதல் சுற்றின் குழு பி பிரிவில் ஸ்கொட்லாந்துக்கு எதிராக தனது முதலாவது ஆட்டத்தை எதிர்கொள்ளும்.

அணிவிவரம்:

மஹ்முதுல்லா (தலைவர்), நைம் ஷேக், சௌம்ய சர்கார், லிதொன் தாஸ், சகீப் அல் ஹசன், முஷ்பிஹூர் ரஹீம், அபிவ் ஹொசைன், நூருல் ஹசன் சோஹன், ஷ ாக் மஹேதி ஹசன், நசூம் அஹமட், முஸ்தாபிஹூர் ரஹ்மான், ஷெரிபுல் இஸ்லாம், தஸ்கின் அகமட், முஹமட் ஷைபுடின், சமீம் ஹொசைன்.

மேலதிக வீரர்களாக அமினுல் இஸ்லாம், ருபெல் ஹொசைன் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)



# அரையிறுதிக்கு முன்னேறி சாதனை படைத்தார் எம்மா!

நியூயோர்க், செப். 10

சுவிற்சர்லாந்தின் பென்கிக்கை இலகுவாக வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறினார் பிரிட்ட னின் எம்மா ரடுசனு.

18 வயதான எம்மா, அமெரிக்க ஓப்பன் ரென்னிஸின் அரையிறுதிப் போட்டிக்கு மிகக் குறைந்த வயதில் முன் னேறிய வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார்.

முன்னதாக இந்த சாதனையை மரிய ஷெரபோவா வைத்திருந்தார். அவரிடமிருந்த சாதனையை கடந்த புதன்கிழமை பகல் நடந்த போட்டியில் கனடாவின் 19 வயதான லேலா பெர்னாண்டஸ் தம் வசமாக்கினார். ஆனால், அன்றிரவே எம்மா ரடுசனு இந்த சாதனையை தன்வசமாக்கினார்.

இந்தப் போட்டியில் 6 -3, 6- 3 என்ற செற் கணக்கில் பென்கிக்கை இலகுவாக வீழ்த்தினார் எம்மா. (ஐ)



# தென்னாபிரிக்க அணியில் டூ பிளசிஸுக்கு இடமில்லை!

கேப்டவுன், செப். 10

இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிக்கான தென்னாபிரிக்க அணியில் டூ பிளசிஸ் சேர்க்கப்பட வில்லை.

பிளசிஸ் கடந்த பெப்ரவரி மாதம் டெஸ்ட் போட்டி களிலிருந்து ஓய்வை அறிவித்தார். உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆடுவதே தனது இலக்கு என்று அவர் கூறியிருந்தார். எனினும், கடந்த டிசம்பர் மாதத்தின் பின்னர் வெள்ளைப்பந்து கிரிக்கெட் போட்டிகளில் அவர் பங்கேற்கவில்லை.

இதேபோன்று 2019 ஒருநாள் உலகக் கிண்ணத்துக்கு பிறகு ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற இம் ரான் தஹீருக்கும் உலகக்கிண்ண அணியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அணி விவரம்:

தெம்பா பவுமா, குயின்ரன் டி கொக், பிஜோர்ன் போர்ரியூன், ரீஷா ஹென்றிக்ஸ், ஹென்றிக் கிளசென், கேசவ் மஹராஜ், ஐடன் மார்க்ரம், டேவிட் மில்லர், வியான் முல்தர், லுங்கி நிகிடி, அன்றிச் நோர்ட்ஜே, டுவைன் பிறேரோறிஸ், ககிசோ ரபாடா, தப்ரைஷ் சம்சி, வான் டேர் துஷன்.

மேலதிக வீரர்களாக ஜோர்ஜ் லின்ட், அன்டில் பெஹ்லுவாயோ, லிஷாட் வில்லியம்ஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# நியூசிலாந்துடனான தொடர் பங்களாதேஷ் வசமானது!

டாக்கா, செப். 10

நியூசிலாந்துக்கு எதிரான நான்காவது இருபது - 20 போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி தொடரை 3-1 எனக் கைப்பற்றியது.

பங்களாதேஷ் சென்றுள்ள நியூசிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் பங் கேற்கிறது. முதல் மூன்று போட்டிகள் முடிவில் பங் களாதேஷ் அணி 2-1 என, முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில் நான்காவது போட்டியில் நேற்று முன்தினம் இரு அணிகளும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ரச்சின் ரவிந்திர (0), பின் ஆலன் (12) ஏமாற்றினர். ரொம் லதாம் (21) சோபிக்கவில்லை. ஹென்றி நிக்கோல்ஸ் (1), கிராண்ட்ஹோம் (0), ரொம் பிளன்டெல் (4) நிலைக்கவில்லை. வில்யங் (46) ஆறுதல் அளித்தார்.

நியூசிலாந்து அணி 19.3 ஓவர்களில் 93 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பங்களாதேஷ் சார்பில் நசும் அகமது, முஸ்தபிஜூர் ரஹ்மான் தலா 4 விக்கெட் கைப்பற்றினர்.

சுலப இலக்கை விரட்டிய வங்கதேச அணிக்கு லிதொன் தாஸ் (6), சாகிப் அல் ஹசன் (8), முஷ்பிகுர் ரஹிம் (0) சொதப்பினர். முகமது நைம் (29), அணித் தலைவர் மக்முதுல்லா ஆட்டமிழக்காமல் 43 கைகொடுக்க, பங்களாதேஷ் அணி 19.1 ஓவரில், 4 விக் கெட்டுக்கு 96 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. (ஐ)



# இங்கிலாந்து அணியில் ஸ்ரோக்ஸ் விலகினார்!



லண்டன், செப். 10

இருபது - 20 உலகக்கிண்ணத்துக்கான இங்கிலாந்து அணி இயன் மோர்கன் தலை மையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் பிரபல வீரரான ஸ்ரோக்ஸ் இடம்பெறவில்லை. மனநலன் சார் பிரச்னைகளால் அவர் தற்காலிக ஓய்வு எடுத்துள்ளார்.

ரைமல் மில் 4 வருடங்களின் பின்னர் அணிக்கு திரும்பியுள்ளார். ஆர்ச்சர் காயத் தால் ஓய்வில் இருப்பதால் இவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அணி விவரம்,

இயன் மோர்கன் (தலைவர்), மொயின் அலி, ஜொன்னி பெயர்ஸ்ரோ, சாம் பில் லிங்க்ஸ், ஜோஸ் பட்லர், சாம் கரன், கிறிஸ் ஜோர்தன், லியம் லிவிங்ஸ்ரன், டேவிட் மலன், ரைமல் மில்ஸ், அடில் ரஷீத், ஜசன் ரோய், டேவிட் வில்லி, கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட்.மேலதிக வீரர்களாக ரொம் கரன், லியம் டாவ்சன், ஜேம்ஸ் வின்ஸ் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# மலையக தொழிலாளர்களை தொடர்ந்தும் கூலிகளாக வைத்திருக்க முயற்சி

## அரசு மீது தமிழ் முற்போக்குக் கூட்டணி குற்றச்சாட்டு



கொழும்பு, செப்.10

**“ஒட்டுமொத்தமாக மலையகத் தொழிலாளர்களை இன்னமும் நூறு வருடங்களுக்கு கூலித்தொழிலாளர்களாகவே வைக்கும் முயற்சியை இந்த அரசு முன்னெடுக்கின்றது. இதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வாய்மூடி மௌனியாகத் துணை போகின்றது. இதற்கு நாம் இடம் கொடுக்க முடியாது.”**

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது: -

“பால் உற்பத்தி செய்ய 31 பால் பண்ணைகள் அரசின் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் கீழ் இருக்கையில், அவற்றை அபிவிருத்தி செய்யாமல், பால் உற்பத்தியை அதிகரிக்கின்றோம் என்ற போர்வையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் மலைத்தோட்டக் காணிகளை உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு, கொடுக்க அரசு முயல்கின்றது.

அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான நாவலப்பிட்டி கலபொடவத்த தோட்டம், கண்டி அந்தானை பகுதியைச் சேர்ந்த தெல்தொட்ட தோட்டம், க்றேவ் வெலி தோட்டம் மற்றும் வட்டவளை மவுன்ட் ஜின் தோட்டம் ஆகியவற்றில் சுமார் 1,100 ஏக்கர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கி வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் தோட்டங்களை உருவாக்கி நூறாண்டுகளாக பரம்பரை பரம்பரையாக அங்கு வாழும் தொழிலாளர்களை உள் வாங்கி, அவர்களுக்கு காணிகள் வழங்கி, பசுமாட்டு வளர்ப்புக்கு உதவி செய்து, வீட்டுப் பண்ணை அடிப்படையில், பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு மறுக்கின்றது.

இதே போன்ற தோட்ட காணிகள் தொழிலாளருக்கு மறுக்கப்பட்டு வெளியாருக்கு மாத்திரம் கொடுக்கப்படும் முயற்சிகள் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களிலும் ஆரம்பமாகியுள்ளன.

பால் பொருட்கள் இறக்குமதி நிறுத்தப்பட வேண்டும். உள்நாட்டு பால் உற்பத்தி பெருக வேண்டும். இந்நாட்டில் பாலாறு, தேனாறு ஓட வேண்டும். இவற்றுக்கு நாம் இரண்டு கைகளையும் தூக்கி ஆதரவு வழங்குவோம். ஆனால், இருக்கும் பால்பண்ணைகளை அபிவிருத்தி செய்யாமல், புதிய பண்ணைகளை அமைக்கிறோம் என்ற போர்வையில், மலையகக்காணிகளை அபகரித்து, நமது மக்களை நடுத்தெருவில் நிறுத்த இடம் கொடுக்க முடியாது.

காணிகளைப் பிரித்து, நமது மக்களுக்கும் வழங்குங்கள். கிராமத்து மக்களுக்கும் வழங்குங்கள். பசு மாடுகள் பெற கடன் உதவி செய்யுங்கள். நமது மக்கள் மிக சிறந்த உழைப்பாளிகள். வீட்டு பால் பண்ணைகளை நடத்தி உங்களுக்கு பால் தருவார்கள். இதன் மூலம் அவர்களது வருமானமும் அதிகரிக்கும். பால் உற்பத்தியும் அதிகரிக்கும். நாடும் செழிக்கும். உலகில் இன்று பால் உற்பத்தி இப்படி சிறு பால் விவசாயிகளால் தான் வளர்க்கப்படுகின்றது.

நீங்கள் அடையாளம் கண்டுள்ள அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான மலைக்காணிகள், பால் பண்ணை நடத்த அல்ல, வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படப் போகின்றது என எங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதன் உள்நோக்கம் மலைநாட்டு தொழிலாளருக்கு மட்டுமல்ல, இந்நாட்டின் சுற்று சூழல் பாதுகாப்புக்கும் ஆபத்தை விளைவிக்கும் என எமக்குத் தெரியவந்துள்ளது.

இந்த பகுதிகளில் ஏற்கனவே மாணிக்க கல் தோண்டும் நடவடிக்கைகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. அவற்றை முழுமையாக்கவா இந்த நடவடிக்கை என நாம் கேட்கிறோம். இதனால், இந்த மலைகளில் இயற் கைக்கு எதிராக நடைபெறும் நடவடிக்கைகள் நாட்டின் நீர் பிடிப்பு பிரதேசங்களை பாதிக்கும். மகாவலி கங்கையின் ஆரம்பம் இங்கே என்பதை மறக்காதீர்கள்.

மலையகத் தொழிலாளரின் வாழ்வாதாரத்துக்கு புதிய நவீன வழி காட்டாமல், மலையகத் தொழிலாளர்களை தொடர்ந்தும் கூலிகளாகவே வைத்துக் கொண்டு, மலையகச் சுற்று சூழலுக்கும் ஆபத்தை விளைவிக்கும் இதுபற்றி, இ.தொ.கா. என்ற அமைப்புக்குத் தெரியாதா? இவர்களுக்கு தங்கள் அரசில் என்ன நடக்கின்றது என்றே தெரியாதா? மலையகக் காணிகளை இப்படி அடாத்தாக பறிக்க இடம் கொடுத்தால், எமது சமூகம் இன்னமும் நூறு ஆண்டுகளுக்கு தொடர்ந்து கூலி தொழிலாளர்களாகவே வாழ வேண்டி வரும் என்பது புரியவில்லையா?” - என்று கேள்வி எழுப்பினார். (இ)

# மரண அறிவித்தல்



**மலர்வு**
**24 - 12 - 1954**

**உதிர்வு**
**08 - 09 - 2021**

## திருமதி வினிபிரட் விமலேந்திரநாதன் பாலராணி

வரணி இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட வினிபிரட் விமலேந்திரநாதன் பாலராணி அவர்கள் 08.09.2021 புதன்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை – பூமணி தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான டானியல் ஜேம்ஸ் பொன்னுத்துரை மேரி – அன்னரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வினிபிரட் விமலேந்திரநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும்,வில்லியம் ஜெயநேசன் (ஆசிரியர்– கொழும்பு புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயம், கொழும்பு- 04), டானியல் ஜெயசீலன்(லண்டன்), வின்சன் ஜெயக்குமார்(கனடா), ஸ்ரீபன் ஜெயராஜ் (BBK– கணக்காளர்), ஜெசி ஜெயபாலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும்,பபிந்தினி, பானுமதி(லண்டன்), ரூபினி (கனடா), டிலானி, றிக்கேஸ் (ஆசிரியர்– கொழும்பு புனித/பரி.தோமையர் கல்லூரி, கல்கிசை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,பரஞ்சோதி, பாலகௌரி, வரதலக்ஷ்மி, காலஞ்சென்ற பாலசோதி, சிவயோகம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற குமாரசிங்கம், பேரம்பலவாணர், கமலநாதன்(லண்டன்), காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ் பாலேந்திரன், இந்திராணி மற்றும் வணபிதா நவேந்திரானுகூலன், கஜேந்திரலலிதா, இந்திரவதனா ஆகியோரின் அன்பு மைத்துனியும்,காலஞ்சென்ற வள்ளிநாயகி, செல்வநாயகி, கலாநிதி வணபிதா எட்வேட் நயினார் லோரன்ஸ், லில்லிரோகினி, காலஞ்சென்ற நவரட்ணம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும்,பெவன், பெவினி, பெனாஜா, ஜெறிஜா, ரியானா, ரஷான், டிவியா, நிவியா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும்,ஜெய்டன், ஜெய்ட்றா ஆகியோரின் அம்மம்மாவும், சுகந்தினி(லண்டன்), பாலகுமார், உதயமதி(லண்டன்), கதிர், வசீகரன்(லண்டன்), யசோதரன்(லண்டன்), பாலஜோதி(லண்டன்), பிரபாகரன்(கொழும்பு), சிறீகரன்(லண்டன்), நிரோஜா, நிரோஜன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும்,சுனிற்ராநாளினி டெய்சி(கனடா), அனுசியா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சித்தியும்,யூலியனா(கனடா), கிறிஸ்ரியனா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**டானியல் (மகன்)- 447888888596**

இல. 20, 1/4 இனிசியம் வீதி,
தெஹிவளை,கொழும்பு.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 4 நாள்களில் மூன்று பொலிஸார் தொற்றால் மரணம்

கொழும்பு, செப். 10

இம்மாதம் 04ஆம் திகதி முதல் 07ஆம் திகதி வரையிலான நான்கு நாள்களில், மூன்று பொலிஸார் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சு ஒன்றின் ஒருங்கிணைப்புப் பிரிவில் பணியாற்றி வந்த பொலிஸ் அதிகாரி ஒருவரும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவில் உப பொலிஸ் பரிசோதகராகப் பணியாற்றி வந்தவரும் மற்றும் ஹிக்கடுவை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அதிகாரியாகப் பணியாற்று வந்த ஒருவருமே இவ்வாறு உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்த மூன்று பொலிஸ் அதிகாரிகளில் இருவர் கொரோனாத் தடுப்பூசிகள் இரண்டையும் பெற்றுக்கொண்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒருவர் ஒரு தடுப்பூசியேனும் பெற்றுக்கொள்ளாதவர் என்றும் கூறப்படுகின்றது. (இ)



# கொழும்பில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள்

கொழும்பு, செப். 10

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பவதி கொழும்பு டி சொய்சா மருத்துவமனையில் ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

குறித்த பெண் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தமையால் அவருக்கு சிசேரியன் முறையில் நேற்றுக் காலை பிரசவம் இடம்பெற்றது. மூன்று குழந்தைகளும் தாயும் நலமாக இருக்கின்றனர் என்று அறுவைச் சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவர் தெரி வித்துள்ளார்.(இ)

# ‘சன்ஷைன் சுத்தா’ கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது!

கொழும்பு, செப். 10

பாதாள உலகக் குழு உறுப்பினரான ‘சன்ஷைன் சுத்தா’ கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் வெலிகம - உடுகாவ பிரதேசத்தில் வைத்து நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், தற்போது வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ள பிரபல பாதாள உலகக்குழு உறுப்பினரான ஹரக் கட்டாவுக்கு நெருக்கமான ஒருவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## அத்தியாவசியமற்ற...

கள் அவற்றுக்கான முழுத்தொகையை யும் பணமாக வைப்புச்செய்வது கட்டாய மாக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற நாணய சபையின் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கிகளின் நாணயக்கடிதங்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளல் நியதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் தெரிவுசெய்யப் பட்ட அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதியின்போது குறைந்தபட்சம் அதற்குரிய முழுத்தொகையையும் (100 சதவீதம்) பணமாக வைப்புச்செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நாணயமாற்றுவீதத்தை வலுப்படுத்து வதற்கும் வெளிநாட்டு சந்தையின் திரவத் தன்மையை சாதகமான மட்டத்தில் பேணு வதற்குமென தற்போது முன்னெடுக்கப் பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு உதவும் நோக்கிலும் அநாவசியமான இறக்குமதி களை கட்டுப்படுத்தும் நோக்கிலுமே இந் தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதா கத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி கைபேசிகள் மற்றும் நிலை யான தொலைபேசிகள் போன்ற தொலைத் தொடர்பு சாதனங்களையும் மின்விசிறி, தொலைக்காட்சி, குளிரூட்டி, சலவை இயந்திரம், டிஜிற்றல் கமெரா, தலைமுடி கிளிப், சூடாக்கி, விளக்குகள் மற்றும் அனல் அடுப்பு போன்ற வீட்டுப்பாவனை சாதனங்களையும் குழந்தைகளுக்கான ஆடைகள், உள்ளாடை, விளையாட்டு உடைகள், இரவு உடைகள் மற்றும் பிஜா மாக்கள், மேலங்கிகள், சேர்ட் மற்றும் பிளவுஸ், முழு உடை, நீச்சல் உடை, டி-சேர்ட், பாதணி, மணிக்கூடுகள், வெயிலுக்கு அணியும் கண்ணாடி உள் ளிட்ட அணியும் ஆடை மற்றும் துணிப் பொருட்களையும் இறக்குமதி செய்யும் போது இறக்குமதியாளர்கள் அதன் முழுத்தொகையையும் பணமாக வைப் புச்செய்யவேண்டியது அவசியம்.

மேலும் தளபாடம், விளக்குகள், விளக்கு பொருத்துகள், அலங்காரப் பொருட்கள், மேசைப்பொருட்கள், சமையலறை பொருட்கள், கட்டில் விரிப்புகள் போன்ற வீட்டுத்தளபாடங் களையும் இறப்பர் ரயர்களையும் வாயு சீராக்கிகள் கொள்வனவுக்கும் இதே நடைமுறை பொருந்தும்.

அத்துடன், பழ வகைகளான அப்பிள், திராட்சை, தோடம்பழம், உலர்த்திய பழங் கள் மற்றும் பழரசங்களின் இறக்குமதி, ஒப்பனைப் பொருட்கள் மற்றும் மலசல கூடப்பொருட்களின் இறக்குமதி, குடி பானங்களான பியர், வைன், கனிம குடி நீர் மற்றும் ஏனையவற்றின் இறக்குமதி, ஏனைய உணவுப்பொருட்களான தானி யத் தயாரிப்புகள் மற்றும் ஏனைய உணவுப் பொருட்கள், மாவுச்சேர்க்கை கள், சொக்லேட், முளை தானியம், பாலா டைக்கட்டி மற்றும் வெண்ணை ஆகிய வற்றின் இறக்குமதியின் போதும் அதற் குரிய முழுத்தொகையும் பணமாக வைப் புச்செய்யப்பட வேண்டும்.

மேலும் ஏனைய உணவல்லா நுகர்வுப் பொருட்களான இசைசாதனங்கள், புகை யிலைப்பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், காகிதத்தாள்களின் இறக்கு மதிகளும் மேற்படி விதிமுறைக்கு உட்படு கின்றன என்று கூறப்பட்டது. (ஐ)

## தீவிரவாத...

அத்தே ஞானசார தேரர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இவ்வாறு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கையில் மீண்டும் ஒரு பயங்கர வாதத் தாக்குதல் நடைபெறாமல் இருக்க புலனாய்வுத்துறை பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த நல்லாட்சி அரசில் புலனாய் வுப் பிரிவை செயலிழக்கச் செய்ததன் காரணமாகவே சஹ்ரான் உட்பட இஸ் லாமிய அடிப்படைவாதிகள் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நடத்தினர் என்றும் ஞானசார தேரர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

"நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர் குலைக்க பல்வேறு சக்திகளும் ஒன்றி ணைந்து செயல்படுகின்றன.

இலங்கை சீனாவுடன் நெருங்கிச் செயற்படுவதால் சீனாவின் சர்வதேச எதிரிகள் இலங்கையை இலக்கு வைக் கின்றன.

நாட்டில் செயல்படும் சர்வதேச புல னாய்வுத்துறை குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளை அழித் ததைப் போன்று இஸ்லாமிய தீவிரவாதத் தையும் அழிக்க வேண்டும்.

மதத் தலைவர்களைப் பயன்படுத்தி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்ப வத்தை வைத்துக்கொண்டு நாட்டில் பல் வேறு பிரச்சினைகளையும் தூண்ட சிலர் முயற்சிக்கின்றனர்" என்றும் அந்தக் கடி தத்தில் ஞானசார தேரர் மேலும் குறிப்பிட் டுள்ளார். (இ)

## வடக்கில் 71...

மில் 27 பேர், வவுனியா பொது வைத்திய சாலையில் 03 பேர், செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையில் 03 பேர், நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலை யில் 02 பேர், பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் 02 பேர் என 37 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப் பட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் 11 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் 02 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 02 பேர், நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிரலில் ஒருவர், காங் கேசன்துறை கடற்படை முகாமில் ஒரு வர் என யாழ். மாவட்டத்தில் 17 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட னர்.

கிளிநொச்சி பொது வைத்தியசாலை யில் 03 பேர், இரணைமடு விமானப்படை முகாமில் 03 பேர், பளை பிரதேச வைத் தியசாலையில் ஒருவர் கிளிநொச்சி மாவட் டத்தில் 7 பேரும், முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் 03 பேர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 02 பேர் என 5 பேரும் தொற்றாளர்களாக அடையா ளம் காணப்பட்டனர்.

மன்னார் பொது வைத்தியசாலையில் 03 பேர், மன்னார் கடற்படை முகாமில் ஒருவர், வெள்ளாங்குளம் விமானப்படை முகாமில் ஒருவர் என ஐவர் தொற்றாளர் களாக அடையாளம் காணப்பட்டனர்.

## யாழ்ப்பாணத்தில்...

பெற்ற சுழிபுரத்தைச் சேர்ந்த 50 வயது டைய பெண் ஒருவரும் சாவகச்சேரியைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும் காரைநகரைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவரும் யாழ்ப்பாணம் வேம்படி யைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒரு வரும் அரியாலையைச் சேர்ந்த 81 வயது டைய ஆண் ஒருவரும் உயிரிழந்தனர்.

தென்மராட்சி சுகாதார மருத்துவ அதி காரி பிரிவில் மீசாலை மேற்கைச் சேர்ந்த 91 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் கோவிட்-19 தொற் றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்.மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர் களின் எண்ணிக்கை 317ஆக உயர்வடைந் துள்ளது.

## கொரோனா...

தெரிவித்துள்ளார்.

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 864 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 175 பேரில் 96 ஆண்களும், 79 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் பெண் ஒருவர் 30 வயதுக்குட் பட்டவராவார். 19 ஆண்கள், 16 பெண் கள் என 35 பேர் 30 - 59 வயதுக்கு இடைப் பட்டவர்களாவர். 139 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 77 ஆண் களும், 62 பெண்களும் அடங்குகின்ற னர். (இ)

# சுற்றுலா பயணிகளுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்துக!

## சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

கொழும்பு, செப். 10

சுற்றுலா பயணிகளுக்கான சுகாதார கட்டுப்பாடுகளில் தளர்வுகளை மேற் கொள்ளுமாறு இலங்கை சுற்றுலா அபி விருத்தி அதிகார சபையின் தலைவர் கிமார்லி பெர்னாண்டோ சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்து வர் அசேல குணவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்றின் ஊடாக இந்த கோரிக்கையை முன்வைத்துள்ள அவர், முழுமையாக தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களுக்கு தனிநபர் பாது காப்பு ஆடைகளை அணிய வேண்டும் என்ற கட்டுப்பாடு நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

முழுமையாக தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்கள் நாட்டுக்கு வரும்போது அதற்கு முன்னரான 72 மணித்தியாலங் களில் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோ தனையை தம்வசம் வைத்திருக்க வேண் டும் என்ற கட்டுப்பாடு தளர்த்தப்பட வேண்டும். அதே போன்று 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு பி. சி. ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் விதிமுறையும் நீக்கப்பட வேண்டும்.

முழுமையாக தடுப்பூசியைப் பெற் றுக் கொண்டவர்களுக்கு விமான நிலை யத்தில் அன்றிஜென் பரிசோதனையை முன்னெடுப்பதற்கு வாய்ப்பு அளிக்கப் பட வேண்டும் என்று அவர் குறித்த கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள் ளார். (ஐ)

# தொற்றால் 80 பிரபலங்கள் மரணம்!

கொழும்பு, செப். 10

இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 80 பிரபலங்கள் உயிரிழந்தார் கள் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள் ளது.

நாட்டில் தொழிலதிபர்கள், அரசியல் வாதிகள், பிரபலங்கள், தொழில் வல்லு நர்கள் மற்றும் கலைஞர்கள் உட்பட பிர பலமாக இருந்த 80 இற்கும் மேற்பட்ட நபர்கள் கொரோனா தொற்றால் உயிரி ழந்தார்கள் என சுகாதாரப் பிரிவு தெரி வித்துள்ளது.

மேலும் பாடகர்கள், நடிகர்கள் உட் பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 300 க்கும் மேற்பட்டோர் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்றுக் குள்ளான அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 27ஆக அதிகரித்துள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றால் உயிரிழந்த முக்கிய பிரமுகர்களில் முன்னாள் அமைச் சரான மங்கள சமரவீர, முன்னாள் சபாநாயகர் வி.ஜ.மு.லொக்குபண்டார, சைட்டம் பல்கலைக்கழகத்தின் பிரதானி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நெவில் பெர்னாண்டோ, கப்பிற்றல் மகாராஜா குழுமத்தின் தலைவர் ஆர். ராஜமகேந்திரன், ஜிப்ஸிஸ் இசைக் குழுவின் தலைவர் சுனில் பெரேரா, இராணுவ பிரிகேடியர் எஸ்.டீ. உதய சேன, விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் மொழிபெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர், மேல் மாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினர் டக்ளஸ் பெர்னாண்டோ, ராகம வைத்தியசாலை வைத்தியர் கயான் தந்தநாராயண, சட்டத் தரணிகள் நிறுவனத்தின் தலைவர் சட்டத் தரணி கௌரிசங்கரி தவராசா ஆகியோரே இவ்வாறு கொரோனா தொற்றுக் கார ணமாக உயிரிழந்தனர் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

# "மக்களை நெருக்கினால் நீதிமன்றம் செல்வோம்!"

கொழும்பு, செப். 10

மக்களை நெருக்கடிக்குள் தள்ளவும் அடக்குமுறைகளை பயன்படுத்தவும் அவசரகால சட்டம் பயன்படுத்தப்படு மாயின் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசிய கட்சி யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், உணவுப்பொருட்களின் விலையை குறைப்பதற்கு அவசரகால சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்திய போதிலும் மக்கள் பயன்பெறவில்லை என்றும் கூறினார்.

ஐ. தே. கட்சியின் உறுப்பினர்களு டன் நேற்று கலந்துரையாடியபோதே ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஐ)

## பயங்கரவாத...

மேலும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை தடுத்து வைத்திருப்பது குறித்தும் விசேட அறிக்கையாளர் மேரி லாலர் உட்பட ஏழு ஐ.நா. அறிக்கையா ளர்கள் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத் தியுள்ளனர்.

அதிகரித்து வரும் வெறுப்பு பேச்சு, வன்முறை மற்றும் முஸ்லிம் சிறுபான்மை யினருக்கு எதிரான நடவடிக்கை தொடர் பாக மனித உரிமை வழக்குகளில் ஈடுபடு வதைத் தடுக்கும் ஒரு முயற்சியாக இந்த கைது இருக்கலாம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டதின் கீழ் கைது செய்யப்பட்டமையானது விசா ரணை இன்றி நீண்ட நாள் தடுத்து வைத் திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளமை குறித் தும் விசேட அறிக்கையாளர்கள் மேலும் கவலை தெரிவித்துள்ளனர்.

நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் குறித்த விசேட அறிக்கையா ளர், கருத்து மற்றும் கருத்து சுதந்திரம் மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பது குறித்த விசேட அறிக்கையாளர், சிறு பான்மையினர் பிரச்னைகள் குறித்த விசேட அறிக்கையாளர் உட்பட ஏழு ஐ.நா. விசேட அறிக்கையாளர்கள் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

## ஊரடங்கு...

டங்கை நீக்குவதற்குத் தீர்மானம் எடுக் கப்படுமாயின் கடுமையான கட்டுப் பாடுகள் அமுல்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா ஒழிப்புச் செயலணியின் வாராந்த சந்திப்பு ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தலைமையில் இன்று இடம் பெறவுள்ளது. இதன்போது ஊரடங்கு தொடர்பான தீர்மானம் எடுக்கப்படவுள் ளது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதி முதல் தனிமைப் படுத்தல் ஊரடங்கு தளர்வின்றி அமுல் படுத்தப்பட்டது.

தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கானது எதிர் வரும் திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை அமுலில் உள்ளது.

இந்நிலையில், தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை எதிர்வரும் திங்கட்கிழமையுடன் தளர்த்து வதா அல்லது மேலும் நீடிப்பதா என்பது குறித்து இன்று தீர்மானிக்கப்படவுள் ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# சகல துறைகளிலும் அரசுக்கு தோல்வி

## உதயகுமார் எம்.பி. சாடல்



கொழும்பு, செப்.10

**"நாட்டின் அனைத்துத்துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. அரசு அனைத்துத்துறைகளிலும் தோல்வியடைந்துள்ளது."**

**- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் தெரிவித்தார்.**

*கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அவர் மேலும் தெரிவித்ததாவது:-*

*"நாட்டின் பொருளாதாரம் முற்றுமுழுதாக வீழ்ச்சியடைந்துள்ளது. அரசு கடனுக்கு மேல் கடன் பெற்று நாட்டில் கடன் சுமையை அதிகரித்துள்ளது.*

*நாட்டின் வளங்களை, இயற்கை வளங்களை, கடல் வளங்களை வெளிநாடுகளுக்கும் சர்வதேச நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் அரசு தாரைவார்த்துக் கொடுத்துள்ளது.*

*இறக்குமதி தடையால் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உர இறக்குமதித் தடையால் நாட்டில் பஞ்சம் ஏற்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.*

*அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால் மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக நாட்டு மக்கள் அனைவரும் கஷ்டப்படும் நிலைமைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். குறிப்பாக கொரோனா காலத்தில் மக்களுக்குச் சுமைக்கு மேல் சுமை அதிகரிக்கப் படுகின்றது. ஆனால், அரசுக்கு இது குறித்து எவ்வித கவலையும் இல்லை" - என்றார். (இ)*




# காணாமல்போன யுவதியை தேடும் பணி தொடர்கின்றது

*பூண்டுலோயா, செப். 10*

*பூண்டுலோயா - டன்சினன் வனப்பகுதியில் விறகு சேகரிக்கச் சென்று காணாமல்போன யுவதியைத் தேடும் பணிகள் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.*

*25 வயதுடைய குறித்த யுவதி டன்சினன் வனப்பகுதியில் தனது தாயுடன் கடந்த 5ஆம் திகதி விறகு சேகரிக்கச் சென்றார் எனவும், வனத்தின் கீழ்ப் பகுதியில் விறகு தேடி வருவதாக தமது தாயிடம் கூறிச் சென்ற நிலையிலேயே காணாமல்போனார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து காணாமல்போன யுவதியைத் தேடும் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். (இ)*

# அமைச்சர்கள், எம்.பிக்கள் 8 பேர் தனிமைப்படுத்தலில்

*கொழும்பு, செப். 10*

*தற்போதைய நிலையில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்மர் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.*

*அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்த, டீ.வி.சாணக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திஸநாயக்க, அசங்க நவரத்ன, கெவிந்து குமாரதுங்க மற்றும் டயானா கமகே ஆகியோரே இவ்வாறு தனிமைப்படுத்தலில் உள்ளனர்.*

*இதேவேளை, அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன ஆகியோர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் தனிமைப்படுத்தலில் உள்ளனர். ஏனையவர்கள் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய நிலையில் தனிமைப்படுத்தலில் உள்ளனர். தனது வீட்டில் ஊழியர் ஒருவருக்குத் தொற்று உறுதியானதால் தான் தனிமைப்படுத்தலில் இருக்கின்றார் என்று டயானா எம்.பி தெரிவித்துள்ளார். (இ)*

# மகளிர் சிறையிலுள்ள தன் மனைவிக்கு தொலைபேசி அழைப்பெடுத்த ரிஷாத்?

*கொழும்பு, செப். 10*

*கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றுமொரு மோசடியான செயலில் சிக்கியுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*இவர், கடந்த **6** ஆம் திகதி பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டிருந்தபோது, வெலிக்கடை மகளிர் சிறைச்சாலைக்கு தொலைபேசி அழைப்பு மேற்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.*

*முற்பகல் **11:55** மணியளவில் ரிஷாத் பதியுதீனிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்ததாக வெலிக்கடை மகளிர் சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இவ்வாறு அழைப்பை எடுத்த ரிஷாத் பதியுதீன் எம்.பி,வெலிக்கடை மகளிர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மனைவியுடன் பேச விரும்புவதாக தெரிவித்துள்ளார்.*

*எனினும்,குறித்த அழைப்பை எடுத்த வெலிக்கடை மகளிர் சிறைச்சாலை அதிகாரி இவரது கோரிக்கையை மறுத்துள்ளார்.*

*அது சிறைச் சட்டத்துக்கு முரணான செயல் என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

*பாராளுமன்ற உறுப்பினரிடம் இருந்து வந்த தொலைபேசி எண் பாராளு மன்றத்துக்கு சொந்தமானது என்று சிறைத்துறை சந்தேகிக்கிறது.*

*சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)*






# மரண அறிவித்தல்



மலர்வு
01 - 04 - 1938

உதிர்வு
06 - 09 - 2021

## கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்

B.A Diploma, MA in Education, ஓய்வுநிலை அதிபர் வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், ஆசிரியர் நயினாதீவு மகாவித்தியாலயம், வேலணை மத்திய மகாவித்தியாலயம், பத்திரிகை ஆசிரியர் , Former President of Toronto Tamil Seniors Association, President of Sathya Sai Center Wellesley & Parliament

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும், கனடா Markhamஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம் அவர்கள் 06.09.2021 திங்கட்கிழமை அன்று நயினை இரட்டங்காலி முருகனின் பாதகமலங்களில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் (பாணப்பா) - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மரு மகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும்,ரகுபதி (ஆசிரியர் யா/சாவகச்சேரி இந்தக் கல்லூரி), மணிலால்(கனடா), வாசுகி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,சொரூபவதி(ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற நிரஞ்சனி மற்றும் சிவகுமார்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்ற சண்முகநாதபிள்ளை(ஓய்வுநிலை அதிபர்) மற்றும் குமாரசூரியர் JP(ஓய்வு நிலை தபால் அதிபர், நயினாதீவு), மணிமேகலைராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான விசாகப்பெருமாள், பத்மாசினிதேவி மற்றும் காந்திமலர், சிவபாலன்(ஓய்வுநிலை அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற பத்மசோதி மற்றும் கலாநிதி, அமுதபதி, உமாசுதன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும்,இளங்குமரன், செந்தில்குமரன், செந்தூர்குமரன், சிவரஞ்சனி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், கமலவேந்தன், உதயமாலினி ஆகியோரின் ஆசை மாமாவும், வித்தகன், லதாங்கி, கோபிகன், லக்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 11 Sep 2021 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Sunday, 12 Sep 2021 6:00 AM - 8:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Sunday, 12 Sep 2021 8:30 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue> Gormley> Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**மணிலால் (மகன்)- 14164593641**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்




6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10

**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்